வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 04.10.2021 திங்கட்கிழமை | இதழ் : 303 | பக்கங்கள் : 16




# யாழ். கலாசார மண்டபப் பராமரிப்பை 5 ஆண்டுகள் இந்தியா பொறுப்பேற்கும்

## இந்திய வெளியுறவுச் செயலர் உறுதியளிப்பு



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 04

யாழ்ப்பாணம் மத்திய கலாசார மண்டபத்தின் கட்டடப் பராமரிப்புச் செலவை 5 ஆண்டுகளுக்கு இந்திய மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் என்று இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா தெரிவித்தார். 15

## நேற்று 800 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஒக். 04

நாட்டில் மேலும் 800 கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட் 15

## வடக்கில் 33 பேருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், ஒக். 04

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஐந்து பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 33 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

167 பேருக்கு நேற்று பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந் 15

## கூட்டமைப்புக்களை இணைப்பதோ தேர்தல் அரசியலோ எம் இலக்கல்ல

### தமிழ் மக்களாட்சிச் செயற்குழு விளக்கம்

திருமலை, ஒக். 04

"தமிழ் அரசியல் கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தமிழ் மக்களாட்சிச் செயற்குழு, தமது முயற்சியை தமிழ் அரசியல் கட்சிகளை, அல்லது கூட்டமைப்பு மற்றும் முன்னணிகளை, கட்டமைப்பு ரீதியாக இணைக்கும் முன்னெடுப்பாக விளங்கிக் கொள்ள வேண்டாம்" எனத் தெரிவித்திருப்பதுடன், "தேர்தல் அரசியலின் நெளிவு சுழிவுகளுக்குள் நுழைவதோ, கட்சிகளுக் 15

## கடமைக்கு இடையூறு செய்தார்களாம் வானத்தை நோக்கி பொலிஸ் சூடு

### ஊரெழு பகுதியில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 04

வலி. கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் தமது கடமைக்கு இடையூறு விளைவித்ததால் பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தி எச்சரித்தனர்.

இந்தச் சம்பவம் ஊரெழு பகுயில் நேற்றிரவு 8.00 மணியளவில் 15


## யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஐவருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஒக். 04

இலங்கை முழுமையும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தநிலையில் மாணவர்களை 15

## போராட்டங்களை மேற்கொள்ளும் தொழிற்சங்கங்கள் மீது நடவடிக்கை

### அமைச்சர் சரத் வீரசேகர எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 04

தொற்று நோய் நெருக்கடிக்கு மத்தியில் நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில் போராட்டங்களில் ஈடுபடும் தொழிற்சங்கங்கள் மற்றும் குழுக்களுக்கு எதிராக கடுமை 15

## எந்தவொரு சூழ்ச்சியாலும் அரசை கவிழ்க்க முடியாது

### பங்காளிகளுக்கு பசில் பதிலடி



கொழும்பு, ஒக். 04

"சிறிலங்கா பொதுஜன முன்னணி அரசு நிலையான அரசு. இந்த அரசை எந்தவொரு சூழ்ச்சியாலும் கவிழ்க்க முடியாது. அரசுக்குள் எவரும் இருக்கலாம் எவரும் வெளியேறலாம்." - இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் 15

## சடுதியாக குறைந்தன கொரோனா மரணங்கள்

கொழும்பு, ஒக். 04

நாட்டில் மேலும் 40 பேர் கொரோனாத் தொற்றால் மரணித்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் 22 ஆண்களும், 18 பெண் 15



## இப்படியும் நடக்கிறது...!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் சம்பந்தனைச் சந்தித்து கட்சிக்குள் நடக்கும் பல விடயங்களை விலாவாரியாக எடுத்துரைத்த விடயத்தை கடந்த இரண்டு நாட்களாக இந்தப்பந்தியில் பார்த்திருந்தோம்.

விசயம் ஒரு முடிவுக்கு வரும்வரை ஊர்க்குருவிக்கும் வேறு எங்கும் பறந்துதிரிய வேண்டிய தேவை இல்லைப் போல இருக்கிறது.

அந்தச் சந்திப்பில் நடந்த சுவாரஷ்யமான விசயம் ஒன்றை இன்று தருவதாக நேற்று குறிப்பிட்டிருந்தேன். ஆனால் அதைவிட முக்கியமான விடயம் ஒன்றை இன்று தரவேண்டியிருக்கின்றது.

சம்பந்தன் ஐயா பற்றி முன்னரும் ஒருதடவை இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன். அவர் எப்போதுமே தனக்கு நிகரான தராதரம் இல்லாதவர்களை மதித்து நடப்பவரல்ல என்றே பரவலாக கூறப்படுவதுண்டு. திருமலையில் தமிழரசின் 'போர்வாளாக' இருந்தவர் மூதூர் தங்கத்துரை. அவர் ஆங்கிலம் போசத்தெரியாதவர் என்பதால் சம்பந்தன் அவரை மதிப்பதில்லை என்றும் அதனாலேயே ஆங்கிலத்தை மாத்திரமல்ல, சட்டத்தையும் கற்று ஒரு சட்டத்தரணியாக வந்து சம்பந்தனுக்கு சரிக்குச்சரியாக அமர்ந்திருந்து சாதித்தவர் தங்கத்துரை என்றும் அவர் பற்றி கூறப்படுவதுண்டு. தங்கத்துரை உயிரோடு இருக்கும் வரை அவரே திருமலையின் 'கிங்'காக இருந்தவர் என்பதையும் இந்தப்பத்தியில் முன்னர் ஒருதடவை சொல்லியிருந்தேன்.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களில் சித்தருக்கு ஓரளவு மதிப்பை கொடுத்தாலும் மற்றவர்களை எவ்வாறு கையாள்வார் என்பது சம்பந்தனைத் தெரிந்தவர்களுக்குத் தெரியும்.

ஆனாலும் கூட்டமைப்பிலிருந்து மற்றைய இரு கட்சிகளும் வெளியேறுகின்ற நிலை வந்தால், திருகோணமலையில் ஒரு தமிழர் எதிர்காலத்தில் வெற்றிபெறுவது கடினமானது என்பதையும் அவர் அறியாதவரல்ல. எனவே இந்த ஒற்றுமை, அவர் சொல்வதுபோல இனத்திற்கு மட்டுமல்ல, அவருக்கும் முக்கியமானது.

அதுபற்றி பின்னர் ஒரு நாளில் விரிவாகப் பார்ப்போம்.

பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் சந்தித்து, சுமந்திரன் தன்னிச்சையாக செய்கின்ற விடயங்களைப் பட்டியலிட்டு வந்தபின்னர் அவர் நேற்று ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார். ஒற்றுமை அவசியம் என்றாலும், அவர் தான் அரசியலுக்கு கொண்டுவந்த ஒருவர் மீது குற்றம்காண விரும்பவில்லை என்பதை அவரது அறிக்கை வெளிப்படுத்தியது.

அந்த அறிக்கை வெளிவருவதற்கு முன்னர் நடந்த உள்வீட்டு விடயங்கள் அதனை உறுதிசெய்வதாக இருக்கின்றன.

நேற்று வெளிவந்த அந்த அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னதாக அவர் தயாரித்த அறிக்கை பங்காளிக் கட்சி ஒன்றின் தலைவருக்கு வாசித்துக் காட்டப்பட்டதாம். தொலைபேசியில் வாசித்துக்காட்டியபோது வேறு சிந்தனையில் அதனைக் கேட்டுக்கொண்டிந்த அந்தத் தலைவரும் சரி என்று அதற்கு பச்சைக் கொடி காட்டியிருக்கிறார்.

மற்றயை ஒரு தலைவருக்கு அனுப்பப்பட்டபோது, அதனைப் படித்துப்பார்த்த அவர் கொதித்துப்போயிருக்கிறார். எப்போதும் எதனையும் அமைதியாக இருந்து கடந்துசெல்கின்ற அந்தத் தலைவர் சொன்னாராம், இந்த அறிக்கை வெளிவந்தால், சம்பந்தன் ஐயாவின் அறிக்கைக்கு முதல்தடவையாக நான் மறுப்பு அறிக்கை வெளியிட வேண்டியிருக்கும் என்று.

அதனால் ஒரு சிறிய திருத்தத்துடன் சம்பந்தனின் அறிக்கை பின்னர் ஊடகங்ககளுக்கு வெளியிடப்பட்டது.

முதலாவது அறிக்கையில் சம்பந்தன் சொல்லியது இதுதானாம்: 'கூட்டமைப்பின் ஒற்றுமையை சிதைப்பதற்கும் சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இந்த விடயங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களோடு கலந்துரையாடப்பட்டு குறித்த விடயங்கள் தெளிவு படுத்தபப்ட்டுள்ளன.'

இப்படித்தான் முதலாவது அறிக்கையில் இருந்திருக்கின்றது. அதுவே பின்னர்-

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை சிதைப்பதற்கு, சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. ஒற்றுமையை உறுதி செய்யும் முகமாக, இந்த விடயங்கள் தொடர்பில், சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெறும்' என்று மாற்றப்பட்டிருக்கின்றது.

ஆக, நேற்றுமுன்தினம் இந்தப்ப த்தியின் ஆரம்பத்தில் எழுதியிருந்த கதைபோல, கூடாரம் பறிபோய்விட்டதைத் தெரியாமல், ஆகாயத்தைப் பார்த்து வர்ணனை செய்துகொண்டிருந்த மகனை பாராட்டிக்கொண்டிருக்கப் போகிறார் என்பதையே அவரது நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன.!

**- ஊர்க்குருவி**

# இலங்கையின் உண்மையான நண்பன் இந்தியா என்பது உறுதி

### சுப்பிரமணியன் சுவாமி சொல்கின்றார்



புதுடில்லி, ஒக். 04

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று இலங்கை வரவுள்ளதாக பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தாருடன் நவராத்திரி விழாவில் பங்கேற்குமாறு தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சுப்ரமணியன் சுவாமி ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

தனது இலங்கை விஜயத்தின் போது இலங்கையின் பாதுகாப்பு படைகளை சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்கும் நிகழ்வொன்றில் தேசிய பாதுகாப்பு தொடர்பில் உரையாற்றவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் உண்மையான நண்பன் இந்தியா என்பது ராஜபக்ஷ ஆட்சியில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுப்ரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார். சீனாவுடன் இலங்கை நெருக்கம் கொண்டிருப்பதாக கூறப்படுகின்ற உணர்வுப்பூர்வமான விடயங்கள் அனைத்தும் தற்போது மீளவும் சீரமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார். இலங்கையின் கடந்த ஆட்சியாளர்கள் சீனாவுடன் சாய்ந்திருந்த நிலைமைகள் தற்போது காணப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்திய இலங்கை உறவுகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கான பாதை வரைபட மொன்றை இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட உருவாக்கியுள்ளமை வரவேற்கத்தக்கது எனவும் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

## முன்பள்ளிகளை திறக்கத் திட்டம்

கொழும்பு, ஒக். 04

நாடளாவிய ரீதியில் முன்பள்ளிகளை இம்மாதம் மீண்டும் திறக்க எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

மஹரகமவில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, பாடசாலைகளை மீண்டும் திறக்கும் இலக்கை நோக்கி அர சாங்கம் தற்போது மிகவும் திறம் பட நகர்கிறது என தெரிவித் தார்.

சுகாதார வழிகாட்டுதல்களின்படி பாடசாலை வளாகத்தில் தொற்று நீக்கம் செய்து, குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்த பின்னர் பாடசாலைகள் படிப்படியாக மீண்டும் திறக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு அனைத்து அரசு அதிகாரிகள், பெற்றோர்கள் மற்றும் மாநில அமைப்புகள் தங்களின் முழு ஆதரவை வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

கல்வி tv CHANNEL-1

**04.10.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**04.10.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
04.10.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# தமிழர் ராஜதந்திரம் என்பது?

சில தினங்களுக்கு முன்னர் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இலங்கைக்கு மீண்டும் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை இடைநிறுத்துவதா அல்லது தொடர்ந்து வழங்குவதா என்பது தொடர்பில் ஆராயும் நோக்கிலேயே குறித்த குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

இந்த சந்திப்பின் போது, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைக்கு ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை வழங்க வேண்டாமென்று குறிப்பிட்டிருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால், அரசாங்க பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடிய குழுவினர், அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் சலுகையை நீடிப்பதாக தற்போது ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருக்கின்றது.

2022இல் இடம்பெறும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வருடாந்த கூட்டத்தொடருக்கு முன்பதாக சில முன்னேற்றங்களை காண்பிக்க வேண்டும் என்னும் நிபந்தனையின் அடிப்படையிலேயே மேற்படி கால நீடிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக மாற்றியமைக்க வேண்டும் என்பதே பிரதான நிபந்தனையாக இருக்கின்றது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை தாம் மாற்றியமைப்போம் என்று அரசாங்கமும் உறுதி மொழி வழங்கியிருக்கின்றது. இலங்கையின் ஆட்சியாளர்களின் வாக்குறுதிகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு நன்கு தெரியும். கடந்த காலத்திலும் இது தொடர்பில் போதிய அனுபவங்கள் அவர்களுக்குண்டு. ஆனாலும் உடனடியாகவே அரசாங்கத்துடன் முரண்படாத வகையிலேயே முடிவுகளை எடுத்திருக்கின்றனர்.

ஆனால் இங்கு கவனிக்க வேண்டிய விடயம், சம்பந்தன் வழங்க வேண்டாம் – என்று கூறிய பின்னர்தான், இந்த விடயங்கள் அனைத்தும் இடம்பெற்றிருக்கின்றன. அவ்வாறாயின் சம்பந்தனின் வார்த்தைகளுக்கான பெறுமதி என்ன? ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகை வழங்க வேண்டாமென்று உடனடியாகவே சம்பந்தன் கூறியது, ஒரு சிறந்த ராஜதந்திர அனுகுமுறையா?

கூட்டமைப்பு இந்த இடத்தில் விடயங்களை ஆராய்ந்து கருத்துக்களை தெரிவித்திருக்க வேண்டும். நேரடியாக நிறுத்துமாறு கூறாது வேறு வார்த்தைகளில் இதனை குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் இங்குள்ள அடிப்படையான பிரச்னை, சம்பந்தன் எப்போதுமே பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடி விடயங்களை முன்வைப்பதில்லை. அப்படியான ஜனநாயக நடைமுறை கூட்டமைப்புக்குள் இல்லை. கூட்டமைப்புக்குள் இடம்பெறும் பல்வேறு பிரச்னைகளுக்கான காரணமும் இதுதான். ராஜதந்திர மட்டத்தினரை சந்திப்பதற்கு முன்னர் கட்சியின் ஏனைய தலைவர்களுடன் ஒரு நிபுணத்துவ கலந்துரையாடல் இடம்பெற வேண்டும். வெளியிலுள்ளவர்களையும் இணைத்துக் கொள்ள முடிந்தால் நல்லது. ஒருவர் எல்லாவற்றிலும் வல்லவராக இருக்க முடியாது. பலருடன் உரையாடி அதன் பின்னர், முடிவுகளை இறுதி செய்கின்ற போது, ஒரு தெளிவான வரைபடம் கிடைக்கும்.

இதில் பிறிதொரு விடயமும் உண்டு. அதாவது, ஜனாதிபதி கோட்டபாயவின் அழைப்புக்காகவும் காத்திருப்பதாக சுமந்திரன் கூறி வருகின்றார். கோட்டபாயவின் அழைப்பிற்காக காத்திருப்பது உண்மையாயின், இவ்வாறு வெளிப்படையாக ஜீ.எஸ்.பி.பிளசை இலங்கைக்கு வழங்காதீர்கள் என்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் கூறுகின்ற போது, எவ்வாறு அரசாங்கத்துடன் உரையாட முடியும்? கூட்டமைப்பு எவருடனும் பேசப் போவதில்லை – அடுத்த ஆட்சி வரும் வரையில் நாங்கள் எதிர்ப்பு அரசியலையே முன்னெடுக்கப் போகின்றோம் என்று முடிவெடுத்ததால், இந்த அணுகுமுறை தவறானதல்ல. ஆனால் ஒரு புறம் அரசாங்கத்துடன் பேசப் போவதாக கூறிக் கொண்டு, பிறிதொரு புறம் இவ்வாறான அணுகுமுறையில் பயணித்தால், இது என்ன ராஜதந்திரம்?

# யாழ்பாணத்தில் இந்திய வெளியுறவு செயலாளர்

**– அலசுவது இராஜதந்திரி -**

*இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வந்திருந்த இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்து அங்கே தற்போதைய நிலபரங்கள் குறித்தும் ஆராய்ந்திருந்தார்.*

*சர்வதேச அரங்கில் அண்மைக்காலங்களில் இந்திய வெளியுறவு துறை கூடுதல் எச்சரிக்கையோடு இருக்கின்ற நிலையே காணப்படுகின்றது. இந்தியாவின் கிழக்கு எல்லைப்புறங்களில் சீனாவின் பிரசன்னம் ஒரு மிரட்டலாக இருக்கின்ற அதேசமயம் இலங்கையிலும் சீனா தனது ஆதிக்கத்தைச் செலுத்த முன்வந்திருக்கின்ற நிலையில் இந்தியா பிராந்திய ரீதியாக தனது பாதுகாப்பையும் கருத்தில் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளது.*



*இதன் வெளிப்பாடாகவே இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லாவின் இலங்கை விஜயமும் அமைந்துள்ளது. இலங்கையைப்பொறுத்தவரை உள்நாட்டரசியலில் ஒர் உறுதியற்ற நிலையே காணப்படுகின்றது. பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தற்போதைய அரசு நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கின்றது.*

*இத்தகைய பின்னணியிலேயே இந்திய வெளியுறவு செயலாளரின் இலங்கை விஜயம் யாழ்ப்பாணத்துக்கான அவரது பயணத்தோடு இடம்பெற்றுள்ளது.*

*இலங்கை விஜயததை முன்னிட்டு இந்திய வெளியுறவு செயலாளர் கருத்து வெளியிட்ட போது வடக்கு -கிழக்கு பிரச்னைத்தீர்வுக்கு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் முழுமையான அமுலாக்கமே அவசியமானதென தெரிவித்திருந்தார்.*

*வடக்கு-கிழக்கின் தமிழ் அரசியல் கட்சிகளும் இதனை மிக உறுதியாகவே ஏற்றுக்கொண்ட நிலையில் ஊஷபூனைக்கு மணி கட்டுவது யார்? என்ற நிலையிலேயே 13-வது திருத்தச்சட்ட அமுலாக்கம் குறித்து காணப்படுகின்றது.*

*இலங்கையின் ஆட்சியாளர்கள் வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வொன்றை காண்பதற்கு 13ஆவது திருத்தச்சட்டம் ஏற்புடையதாக இருக்கின்றதென்பதையும் அறிந்து வைத்துள்ளனர். ஆயினும் அதன் அமுலாக்கம் தொடர்பாக தமது அரசியல் நலன்களுக்கே முதன்மையளித்தவர்களாக இருக்கின்றனர். இதன் காரணமாகவே 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில் அதனை இலங்கைக்கு அறிமுகஞ்செய்வதில் முன்னின்ற இந்தியாவின் பங்களிப்பு அவசியமானதாகின்றது.*

*இந்திய வெளியுறவுத்துறையைப் பொறுத்தவரை இந்தியாவின் இன்றைய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியன் ஜெய்சங்கர் இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் ஒரு ராஜதந்திரியாக பணியாற்றியவர். இலங்கையில் இந்திய அமைதிப்படை 1987ஆம் ஆண்டு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பிரசன்னமாகியிருந்த காலத்தில் ஜெய்சங்கரே இலங்கையிலிருந்த இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் இந்திய அமைதிப்படையினரின் நடவடிக்கைகளுக்கான மேற்பார்வையாளராக பணியாற்றியிருந்தார்.*

*தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி அரசு ஜெய்சங்கரின் ராஜதந்திர ரீதியான நிபுணத்துவத்தை இலங்கை தொடர்பாக மட்டுமல்ல. சர்வதேச ரீதியாகவும் ஜெய்சங்கர் கொண்டுள்ள விரிவான பார்வையை கருத்தில் கொண்டே அவரை அரசியலுக்கு அப்பாற்பட்ட விதத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சராக நியமித்துள்ளது.*


*இந்திய வெளியுறவு செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா இலங்கையின் வடக்கு-கிழக்கு விவகாரம் தொடர்பாக கருத்து வெளியிட்டபோது இலங்கை அரசிடம் வடக்கு -கிழக்கு பிரச்னையை தீர்க்க 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுலாக்கும்படி கோரியிருந்தார். இக்கோரிக்கையை 13ஆவது திருத்தச்சட்டம் அமுலுக்கு வந்த கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக இலங்கையின் வடக்கு-கிழக்கு அரசியல் தரப்பும் இந்தியாவிடம் இடையறாது வலியுறுத்தி வருகின்றது. ஆனால், இது விடயத்தில் இந்தியாவின் மெத்தனப்போக்கும் இலங்கையின் அசமந்தப்போக்கும் நீடித்துச்செல்கின்றனவே தவிர நடைமுறைச்சாத்தியமாக எதுவும் இடம்பெறுவதாக இல்லை.*

*இதேவேளை வடக்கு-கிழக்கு அரசியல் தரப்பு 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்கும்படி கோரிக்கை விடுத்த வண்ணம் இருக்கின்றது. ஆனால் நான்கு கட்சிகளின் கூட்டாக இருக்கின்ற தமிழ் தேசிய கூட்டடைப்பு 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கத்தை மேற்கொள்ள எவ்வளவு தூரம் தன்னை ஒற்றுமைக்குள்ளாக்கி வைத்துள்ளதென்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.*

*வெளிப்பார்வைக்கு ஓர் ஒற்றுமைப்பட்ட அமைப்பாக இயங்குவது போல தமிழ் தேசிய கூட்டமைப்பு காணப்பட்டாலும் அதனுள் அங்கம் வகிக்கின்ற உறுப்பினர்களிடையே பகைமை மற்றும் போட்டித்தன்மை என்பவையே நிலவுகின்றன.*

*இந்நிலையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளியுறவு செயலாளர் ஸ்ரீஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவின் அங்கே இந்திய நலன்கள் தொடர்பாகவே கூடுதல் கவனத்தை செலுத்துவாரென அறிய முடியும். ஏனெனில் தென்னிலங்கையில் சீன ஆதிக்கம் ஹம்பாந்தோட்டை முதல் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திவரை முன்னெற்றங்கண்டுள்ளது. இந்நிலையில் இந்தியாவுக்கு மிக அருகே இருக்கின்ற வடபகுதி குறித்தும் இந்திய தனது அவதானத்தை கொண்டுள்ளதென்பதை, புலப்படுத்துவதையே இந்திய வெளியுறவு செயலாளரின் யாழ்ப்பாண விஜயம் எடுத்துக்காட்டுகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒக்ரோபர் - 04 திங்கட்கிழமை
பிலவ வருடம் - புரட்டாதி 18
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : திரையோதசி

## இன்றைய ராசிபலன்

**04.10.2021**

**மேடம்**
துன்பங்கள் துள்ளி ஓடும். முயன்ற விஷயத்தில் வெற்றி கிட்டும். உள்ளம் மகிழும் நிகழ்ச்சி ஒன்று குடும்பத்தில் நடைபெறும். எடுத்த புதுமுயற்சி ஒன்றில் அனுகூலம் உண்டு.

**இடபம்**
சந்தோஷம் கூடும். கடமையை பொறுப்புடன் செய்வீர்கள். திருமண வாய்ப்பு கைகூடும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். மனபலம் கூடும். தொல்லை தந்த ஒருவர் விலகுவார்.

**மிதுனம்**
பழைய கவலை தீரும். உறவினரின் உதவி கிடைக்கும். உங்கள் செல்வாக்கு மேலோங்கும். வசீகரம் அதிகரிக்கும். உடலுக்கு ஒவ்வாத உணவை சாப்பிட வேண்டாம்.

**கடகம்**
காலையில் குதூகலமும், மாலையில் பொறுப்பும் ஏற்படும். பணியிடத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். மாற்றம் ஒன்று உறுதியாகலாம். நன்மையும் மகிழ்ச்சியும் உண்டு.

**சிம்மம்**
கனிவாகப் பேசி நல்லவர்களின் மனதை கவர்வீர்கள். கண் சம்பந்தமான பிரச்னை வராதபடி காத்துக் கொள்ளுங்கள். செயல், பேச்சினால் பெரியவர்களிடம் ஆசி பெறுவீர்கள்.

**கன்னி**
பணியிடத்தில் புதிய பொறுப்பும், செல்வாக்கும் ஏற்படும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். பெண்கள் முக்கிய காரணத்துக்காக உங்களை நாடுவர்.

**துலாம்**
பொழுது போக்கு அம்சங்களில் கவனம் செல்லும். கடமை தவற வேண்டாம். குழந்தைகளால் பெருமிதம் ஏற்படும். நீங்கள் எதிர்பார்க்கும் நன்மை ஒன்று தாமதமாகும்.

**விருட்சிகம்**
வரவு செலவுகளை திட்டமிட்டுச் செய்வது நல்லது. வேலைப்பளு காரணமாக இன்று ஓய்வின்றி உழைப்பீர்கள். எதிர்பார்த்த செலவு இருக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**தனுசு**
நண்பர்களும் உறவினர்களும் தக்க சமயத்தில் உதவ காத்திருப்பர். திடீர் கோபம் காரணமாக நல்ல நட்பை இழக்க வேண்டாம். புதிய பொறுப்புகளைத் திறம்படக் கையாளுவீர்கள்.

**மகரம்**
வெளிநாட்டில் இருந்து நல்ல செய்தி வந்து சேரும். குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. புதிய மனிதர்களிடம் கவனத்துடன் செயல்பட வேண்டும்.

**கும்பம்**
மறதியால் தவறு நேரலாம். உடல் நலனில் கவனம் தேவை. மாற்றுக் கருத்துடையோரைப் புறக்கணியுங்கள். உழைப்பு பலன் தரும். வேலைபளு இருந்தாலும், அதனால் பலனும் கிடைக்கும்.

**மீனம்**
பெண்களுக்கு அதிக வேலை இருந்தாலும் சமாளிப்பீர்கள். முயற்சிக்கான பலன் தள்ளிப் போகும். உற்சாகம் குறையாது. புதிய பதவி கிடைக்கலாம். தொழிலில் முன்னேற்றம் உண்டு.

# முன்னாள் மத்திய அமைச்சர் குலாம்நபி ஆசாத் சென்னையில் முதல்வர் ஸ்டாலினுடன் பேச்சு

சென்னை, ஒக். 04

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை முன்னாள் மத்திய அமைச்சர் குலாம்நபி ஆசாத் நேற்று சந்தித்து பேசினார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான குலாம் நபி ஆசாத் நேற்று சென்னை வந்தார். அப்போது அவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு சுமார் அரை மணி நேரம் நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் மனைவி துர்கா ஸ்டாலின் கனிமொழி, எம்.பி மற்றும் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்த பின் குலாம் நபி ஆசாத் கூறுகையில், “நாட்டின்



சிறந்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின். அவரது செயல்பாடுகள் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றன.

தந்தை கருணாநிதி போலவே மகனும் இருக்கிறார். நாளொன்றுக்கு முதல்-அமைச்சர் ஸ்டாலின் 18 முதல் 19 மணி நேரம் உழைக்கிறார்” என்று தெரிவித்தார்.

# தமிழகத்தில் பா.ஜ.க.வுக்கு அடிமையாக அ.தி.மு.க.! புதுவையில் என்.ஆர்.காங்கிரஸ் அடிமையாகவுள்ளது

## காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் ஜோதிமணி விமர்சனம்

சென்னை, ஒக். 04

தமிழகத்தில் பா.ஜ.க.வுக்கு அ.தி.மு.க அடிமையாக இருந்ததுபோல, புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் பாஜகவுக்கு அடிமையாக உள்ளது என காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கரூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் ஜோதிமணி விமர்சித்துள்ளார்.

புதுச்சேரி யூனியன் பிரதேச உள்ளாட்சித் தேர்தலுக்கான, காங்கிரஸ் கட்சியின் மேலிடப் பார்வையாளர்களுள் ஒருவரான கரூர் தொகுதி எம்.பி ஜோதிமணி, காரைக்கால் மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக நேற்று காரைக்காலில் காங்கிரஸ் கட்சியினருடன் ஆலோசனை மேற்கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:



“புதுச்சேரியில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலைப் பொறுத்தவரை நகராட்சி முதல் கிராமப் பஞ்சாயத்து வரை அனைத்துப் பகுதிகளிலும் காங்கிரஸ் கட்சி போட்டியிடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளோம். உள்ளாட்சித் தேர்தலில் கூட்டணி நிலைப்பாடு குறித்து, புதுச்சேரி பிரதேச காங்கிரஸ் தலைவர் மற்றும் இங்குள்ள தலைவர்கள் முடிவெடுப்பார்கள்.

என்.ஆர்.காங்கிரஸ் தலைமையிலான அரசு நடைபெற்று வந்தாலும் கூட, தமிழகத்தில் அதிமுக அரசு எப்படி பா.ஜ.கவுக்கு அடிமையாக இருந்து, தேர்தலில் தோல்வியடைந்து, தற்போது கட்சியே கரையும் நிலைமையில் உள்ளதோ, அதேபோல துரதிர்ஷ்டவசமாக புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் பாஜகவுக்கு அடிமையாக உள்ளது. குறிப்பாக மாநிலங்களவைத் தேர்தலில் என்.ஆர். காங்கிரஸை மிரட்டியோ அல்லது வற்புறுத்தியோதான் பா.ஜ.க அந்த இடத்தைப் பெற்றுள்ளது” என ஜோதிமணி தெரிவித்தார்.

# நீட் தேர்வு ரத்து என பொய் வாக்குறுதி கூறி சட்டமன்ற தேர்தலில் திமுக வெற்றிபெற்றது

## பன்னீர்ச்செல்வம் குற்றச்சாட்டு

சென்னை, ஒக். 04

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலின் போது, நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என பொய்யான வாக்குறுதிய மக்களிடத்தில் சொல்லி தி.மு.க. வெற்றிபெற்றதாக கள்ளக்குறிச்சியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.

கள்ளக்குறிச்சியை அடுத்த மாடூர் கிராமத்தில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடும் அ.தி.மு.க .வேட்பாளர்கள் அறிமுகம் செய்து வைத்து, ஓ.பன்னீர்செல்வம் பேசியதாவது:

முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா பல்வேறு தொலைநோக்கு திட்டங்களை அளித்து தமிழகத்தை வளமான மாநிலமாக மாற்றியவர். அவரது மறைவிற்கு பிறகு 4 ஆண்டு காலம் அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே.பழனிச்சாமி சிறப்பான ஆட்சி நடத்தினார்.

இதனால் அ.தி.மு.க. தொண்டன் என்றால் மக்களிடையே ஒரு மரியாதை இருந்தது.

கடந்த 10 ஆண்டு கால அதிமுக ஆட்சியில் மின்தடை இல்லா மாநிலமாக தமிழகம் திகழ்ந்தது.

ஆனால் தற்போது மின்வெட்டு ஏற்படும் நிலை உள்ளது. தேர்தலில் வெற்றி பெற்றால் நீட் தேர்வை ரத்து செய்ய முதல் கையெழுத்து போடுவேன் எனக்கூறி பொய் வாக்குறுதி அளித்த தேர்தலில் திமுக வெற்றிபெற்றது.

இது போல பல்வேறு பொய் வாக்குறுதிகளை தி.மு.க. அரசு அளித்துள்ளது என்றார்.

கூட்டத்திற்கு கள்ளக்குறிச்சி மாவட்ட அதிமுக செயலாளர் ரா.குமரகுரு தலைமை வகித்தார். முன்னாள் அமைச்சர்கள் எம்.சி.சம்பத், விஜயபாஸ்கர், மோகன் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# முதலமைச்சர் வேட்பாளராக மஹிந்தவின் இளைய மகன்!

## பதிலடி கொடுப்பாரா தயாசிறி?





**கொழும்பு, ஒக்.04**

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இளைய மகனான ரோஹித ராஜபக்ஷ, எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. 2022 முற்பகுதியில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படலாம் என நம்பப்படுகின்றது. இந்தத் தேர்தலில் வடமேல் மாகாண முதல்வர் வேட்பாளராக ரோஹித ராஜபக்ஷ களமிறங்க திட்டமிட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இதற்கான ஏற்பாடாகவே கடந்த பொதுத் தேர்தலின் போது இவர் மஹிந்தவுக்காக குருநாகல் மாவட்டத்தில் தீவிர பரப்புரைகளில் இறங்கினார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவும் வடமேல் மாகாண முதல்வர் வேட்பாளராக போட்டியிட விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

பரந்துபட்ட கூட்டணியை அமைத்து கட்சி கட்டளையிட்டால் தான் தயார் எனவும் அவர் கூறியுள்ளார்.

மொட்டு கட்சி மீது தயாசிறி ஏற்கனவே கடும் அதிருப்தியில் இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிலவேளை மாற்று அணி பலமடையும்பட்சத்தில் அவர்களுடன் இணைந்து தயாசிறி போட்டியிடக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே அவர் வடமேல் மாகாண முதல்வராக பதவி வகித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வடக்கு, கிழக்கில் 30 வயதுக்கு மேற்பட்ட 73 வீதமானோருக்கு இரு தடுப்பூசிகளும்!

கொழும்பு, ஒக். 04

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையினரின் கிட்டத்தட்ட 73 வீதமானவர்கள் இது வரை இரண்டு கொவிட் 19 தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையினரில் 72.45 வீதம் பேர் நேற்று முன் தினம் வரை இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளதாக தடுப்பூசித் தரவுகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் வடக்கில் 20 முதல் 29 வயது வரையான பிரிவினரில் 13 வீதத்தினர் இது வரை இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையினரில் 73 வீதம் பேர் நேற்றுமுன்தினம் வரை இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றனர். அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் 89 வீதம் பேர் இதுவரை ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.



# இந்திய மத்திய வெளியுறவு செயலர் கண்டி தலதா மாளிகையில் வழிபாடு

கொழும்பு, ஒக். 04

இந்திய மத்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா நேற்றுமுன் தினம் இரவு இலங்கையை வந்தடைந்த நிலையில் நேற்று காலை கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்குச் சென்று ஆசிர்வாதம் பெற்றார்.

தலதா மாளிகைக்குச் சென்ற அவரை தியவதன நிலமே வரவேற்றார்.

தலதா மாளிகையில் இந்தியா மற்றும் இலங்கை மக்களின் நல்வாழ்வு மற்றும் செழிப்புக்காக வெளியுறவுச் செயலர் பிரார்த்தனை செய்தார் என இந்தியத் தூதுரம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அவர் கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

4 நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன் தினம் இரவு 7.45 மணியளவில் இலங்கை வந்தடைந்த இந்திய மத்திய வெளியுறவுத்துறை செயலாளர், 5 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் என வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் அவர், இருதரப்பு உறவுகள்குறித்து பேச்சுவார்த்தையை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக் கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இன்று கூடுகிறது அமைச்சரவை!

## பால்மா விலையை அதிகரிக்க ஒப்புதல்

கொழும்பு, ஒக். 04

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசின் முக்கியத்துவம்மிக்க அமைச்சரவைக் கூட்டமொன்று இன்று நடைபெறவுள்ளது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்கு அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி இரு வாரங்கள் அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கேற்கவில்லை. பிரதமர் தலைமையிலேயே கூட்டம் நடைபெற்றது.

எனினும், இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி தலைமையிலேயே நடைபெறும்.

இதன்போது முக்கியமான சில தீர்மானங்கள் எட்டப்படவுள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. குறிப்பாக அரிசி பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்திலான முடிவுகள் எடுக்கப்படலாம் என நம்பப்படுகின்றது.

அத்துடன், ஒரு கிலோ பால் மாவின் விலையை 200 ரூபாவால் அதிகரிப்பதற்கும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கவுள்ளது.

அதேபோல சமையல் எரிவாயு, கோதுமை மா மற்றும் சீமெந்து ஆகியவற்றின் விலைகளை அதிகரிப்பதற்கு வாழ்க்கைச்செலவு தொடர்பான அமைச்சரவை உப குழு அனுமதி வழங்கியுள்ள நிலையில் அது பற்றியும் ஆராயப்பட்டு தீர்மானமொன்று எடுக்கப்படவுள்ளது.

# கொரோனா தொற்று உள்ள சிலருக்கு 90 முதல் 180 நாள்கள் வரை அறிகுறிகள்!

கொழும்பு, ஒக். 04

கோவிட்-19 நோய்த் தொற்று உள்ள சிலருக்கு 90 முதல் 180 நாள்கள் வரை அறிகுறிகள் இருக்கலாம் என்று ஒரு புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

மூச்சுத் திணறல் - மன அழுத்தம் - தலைவலி - தசை வலி - தொண்டை வலி போன்ற அறிகுறிகள் இருக்கலாம் என்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுரா பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு, ஒவ்வாமை மற்றும் நுண் உயிரியல் துறை பணிப்பாளம், மருத்துவர் சந்திம ஜீவந்தர சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட கீச்சகப் பதிவில், "இவற்றில் மன அழுத்தம் போன்ற அறிகுறிகள் 15 சத விகிதம் வரை இருக்கும். மற்ற அறிகுறிகள் 1.5 முதல் 8 சதவிகிதம் வரை அதிகமாக இருக்கும்.

இந்த அறிகுறிகள் கோவிட்-19 நோய்த்தொற்றுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களிடையே அதிகம் காணப்படுவதாகவும், அவர்களில் பெரும்பாலோர் பெண்கள்" என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனியார் பாதுகாப்பு சேவை ஊழியர்களின் ஆகக் குறைந்த சம்பள மட்டம் அதிகரிப்பு

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 04

தனியார் பாதுகாப்பு சேவைகளில் ஈடுபடும் பாதுகாப்பு ஊழியர்களின் குறைந்தபட்ச மாதச் சம்பளம் 16 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் 08ஆம் திகதி முதல் இந்த சம்பள விகிதம் நடைமுறைக்கு வரும் என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது

இப்போது வரை, தனியார் பாதுகாப்புத் துறையில் குறைந்தபட்ச சம்பளம் 10 ஆயிரத்து 500 ரூபாயாக உள்ளது.

தேசிய குறைந்தபட்ச சம்பளத் திருத்தத்தின்படி, தனியார் துறையில் குறைந்தபட்ச சம்பளம் 12 ஆயிரத்து 500 ரூபா



வும் மற்றும் வரவு-செலவுத் திட்ட உதவிக் கொடுப்பனவு 3 ஆயிரத்து 500 ரூபாவும் என 16 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், சம்பள ஆணைக் குழுச் சட்டத்தின்படி, தனியார் பாதுகாப்புத்துறையின் உறுப்பினர்களின் தினசரி வேலை நேரம் ஒன்பது மணிநேரம் உணவு இடைவேளை நேரத்துடன் இருக்கும்.

அதையும் தாண்டி சேவையைப் பெற்றால், அதற்காக மேலதிக நேரத்தை செலுத்த வேண்டியிருக்கும்.

தனியார் பாதுகாப்புத் துறையில் பணிபுரிபவர்களில் பெரும்பாலானவர்கள் முப்படைகளில் ஓய்வு பெற்றவர்கள். அவர்கள் மருத்துவ அல்லது சாதாரண விடுப்பு பெறுவதில்லை.

இந்த ஊழியர்களுக்கு தற்போதுள்ள சட்டங்களின்படி தொடர்புடைய விடுப்புக்கு உரிமை உண்டு .

இந்த நிலையான விதிகள் மீறப்பட்டால், தொழில் ஆணையாளர் நாயகத்திடம் முறைப்பாடு செய்ய முடியும்.

இந்த சம்பள உயர்வு தொடர்பான ஏதேனும் நிலுவைத் தொகையை செலுத்த பாதுகாப்பு நிறுவனங்களுக்கு சலுகைக் காலம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது - என்றார்.

# வவுனியா கோவில்குளத்தில் இளைஞர் குழு அட்டகாசம்!

## வாள்வெட்டில் நால்வர் காயம்!!

வவுனியா, ஒக். 05

வவுனியா கோவில்குளம் பகுதியில் இளைஞர்குழு ஒன்று, வீதியால் செல்பவர்களை வழிமறித்து வாள் மற்றும் கோடரிகளால் தாக்கியதில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் நின்றிருந்த குறித்த நபர்கள் வீதியால் செல்பவர்களை தாக்கியதுடன் வீடுகள் சிலவற்றுக்குள் புகுந்து உறங்கிக் கொண்டிருந்தவர்களையும் தாக்கினர்.

இதனால் பெண் உட்பட நால் வர் காயமடைந்த நிலையில் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.சம்பவம் தொடர்பாக பாரா ளுமன்ற உறுப்பினர் கு. திலீப னுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவ இடத்துக்கு சென்ற அவர் நிலைமை தொடர்பாக ஆராய்ந்ததுடன் தாக்குதலை மேற்கொண்டவர்களை கைது செய்யுமாறு பொலிஸாரிடம் கேட்டுக்கொண்டார்.

# திருமலை எரிபொருள் களஞ்சியத்துக்கு இந்திய வெளியுறவுச் செயலர் விஜயம்




திருமலை, ஒக். 04

இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, நேற்று திருகோண மலைக்கு விஜயம் செய்தார். இதன் போது, அங்குள்ள எண்ணெய்த்தாங்கி தொகுதிகளையும் பார்வையிட்டார்.

எண்ணெய்தாங்கி கட்டமைப் பின் அபிவிருத்தி பணிகள் மற்றும் இலங்கை எரிசக்தி பாதுகாப்பை அதிகரிப்பதற்காக இந்திய-இலங்கை எரிசக்தி உதவியை மேலும் பலப் படுத்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பில் எல்.ஐ.ஓ.சி. நிறுவனத்தி னரால் இந்திய வெளியுறவு செயலா ளருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

எல்.ஐ.ஓ.சி. நிறுவனத்தின் புதிய தயாரிப்பான "சேவோ பிரைட் ஏ.எல். ரி. 15டபிள்யு-40'ஐ இந்த விஜயத்தின் போது அறிமுகம் செய்துவைப்பதற் காக, எல்.ஐ.ஓ.சி. நிறுவனத்துடன் இணைந்துகொண் டமை குறித்து வெளியுறவுச்செயலர் தனது மகிழ்ச் சியையும் தெரிவித்துள்ளார்.

# அரச கூட்டுக்குள் குழப்பம் நீடிப்பு!

*5ஆம் திகதி மீண்டும் பங்காளிகள் சந்திப்பு*

கொழும்பு, ஒக். 04

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான மற்றுமொரு கூட்டம் எதிர் வரும் 5 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

கெரவலப்பிட்டிய யுகதனவி மின்உற்பத்தி நிலையத்தின் பங்கு கள் அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்படுவதற்கு மொட்டு கூட்டணியிலுள்ள பங்காளிக் கட்சிகள் போர்க்கொடி தூக்கி யிருந்தன.

அண்மையில் கொழும்பில் கூடி சந்திப்பொன்றையும் நடத்தியிருந்தன. இதனை யடுத்து சர்வக்கட்சி கூட்டத் தைக்கூட்டி இது தொடர்பில் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கு பஸில் விளக்க மளித்தார். அதன்பின்னர் இப் பிரச்னை தீர்ந்துவிட்டதாக கூறப்பட்டது.

எனினும், பங்காளிகள் இன்னும் உடன்படவில்லை எனவும், இது விடயத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலேயே 5 ஆம் திகதி ஆராயப்படவுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

அதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பிய பின்னர், அவரை சந்தித்து இது விடயம் சம்பந்த மாக கலந்துரையாடுவதற்கும் பங்காளிகள் தீர்மானித்துள்ளன.

# ஆட்பதிவு திணைக்களத்தின் சேவைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஒக். 04

ஆட்பதிவு திணைக்களத்தின் சேவைகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

அதன்படி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டலுக்கமைவாக அனைத்து அலுவல கங்களிலும் இன்று முதல் பொதுமக்களுக்கான சேவைகள் ஆரம்பிக் கப்படவுள்ளன.

எவ்வாறாயினும் ஒரு நாள் சேவை முன்னெடுக்கப்படாதென ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

# இந்தியா- இலங்கை கூட்டு போர்ப்பயிற்சி!

## அம்பாறையில் இன்று முதல் நடக்கும்

கொழும்பு, ஒக்.04

**பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதை மைய மாகக் கொண்டு இந்தியாவும் இலங்கையும் இன்று திங்கள் கிழமை முதல் 12 நாள் மிகப்பெரிய இராணுவப் பயிற்சியை நடத்தவுள்ளன.**



8ஆவது 'மித்ர சக்தி' பயிற்சி இன்று திங்கள் முதல் ஒக்ரோபர் 15 வரை அம்பாறையில் உள்ள போர் பயிற்சிப் பாடசாலையில் நடத்தப்படும்.

"இரு நாடுகளின் ராணுவங்க ளுக்கிடையேயான நெருக்க மான உறவை மேம்படுத்துவ தோடு, செயல்பாட்டை மேம் படுத்துவதும், கிளர்ச்சி மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக் கைகளில் சிறந்த நடைமுறை களைப் பகிர்ந்து கொள்வதும் இந்தப் பயிற்சியின் நோக்கமா கும்." என இந்தியப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த பயிற்சியில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 120 பேர் கொண்ட அணியும், இலங்கை இராணுவத்தின் ஒரு படைப்பிரிவும் பங்கேற்பார்கள் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த பயிற்சி தெற்காசிய நாடுகளுக்கிடையிலான உறவை மேலும் வலுப்படுத்த நீண்ட தூரம் செல்லும் என் றும், இரு படைகளுக்கும் இடையே அடிமட்ட அளவில் ஒத்துழைப்பை கொண்டுவரு வதில் ஒரு ஊக்கியாக செயல் படும் என்றும் அமைச்சு தெரி வித்துள்ளது.

7ஆவது மித்ரா சக்தி பயிற்சி 2019 இல் புனேயில் உள்ள வெளிநாட்டுப் பயிற்சி முனை யில் நடத்தப்பட்டது.

# இன்று முதல் கைதிகளை பார்வையிட அனுமதி!

கொழும்பு, ஒக். 04

சிறைச்சாலை கைதிகளை சந்திப்பதற்காக விதிக்கப்பட் டிருந்த தடை இன்று திங்கள் கிழமை முதல் நீக்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொவிட் தொற்று காரண மாக கடந்த ஓகஸ்ட் மாதம் 07 ஆம் திகதியில் இருந்து சிறைச் சாலை கைதிகளை, உறவினர் கள் சந்திப்பது தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டிருந்தது.

தொற்றுநோய் முற்றிலுமாக ஒழிக்கப்படாததால், அரசாங்கத் தினால் வழங்கப்பட்டுள்ள சுகா தார வழிகாட்டுதல்களைப் பின் பற்றி உறவினர்களுக்கு அனுமதி வழங்கவும், முடிந்த வரை ஈ-விசிட் முறை மூலம் பார்வையிட வசதி களை ஏற்படுத்துமாறும் சிறைச் சாலைகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள கைதிகளை ஒவ்வொரு வாரமும், ஏனைய கைதிகளை மாதாந்தமும் சந்திக்க உறவினர் களுக்கு அனுமதியுண்டு என் பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் சில பகுதிகளில் வானில் பறந்தது என்ன?

*கொழும்பு பல்கலைக்கழகம் வெளியிட்ட தகவல்*



கொழும்பு, ஒக். 04

நாட்டின் சில பகுதிகளில் வானில் பறந்து வந்த சிலந்தி வலையை ஒத்ததான வலையானது, இயற்கையானது என கொழும்பு பல்கலைக்கழக விண்வெளி விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

மொனராகலை, அம்பாறை, தெஹியத்தகண்டி, சூரியவெவ உள்ளிட்ட சில பகுதிகளில் நேற்று முன்தினம் இந்த வலை வடி விலான ஒன்று பறந்து வருவதை மக்கள் அவதானித்துள்ளனர்.

இது குறித்து நடத்தப்பட்ட ஆய்விலேயே, இந்த வலையா னது, சிலந்தி வலை என்பது உறுதிப்படுத்தப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

சிலந்திகள் இந்த காலப் பகுதியிலேயே முட்டை இடும் என வும், முட்டையிலிருந்து உருவாகும் சிலந்திகள் அங்கும் இங்கும் செல்ல சிலந்தி வலையை பயன்படுத்தும் எனவும் அவர் கூறுகின்றார்.

அவ்வாறான சிலந்தி வலைகளே, இவ்வாறு காற்றில் பறந்து, பல பகுதிகளுக்கும் செல்வதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வீட்டில் இருந்த தாயையும் மகனையும் கட்டிவைத்து தாக்கிவிட்டுக் கொள்ளை

*நாவற்குழியில் அதிகாலை சம்பவம்*

நாவற்குழி பிரதேசத்தில் நேற்று அதிகாலை திருடர்கள் வீடு புகுந்து தாயையும், மகனை யும் கட்டி வைத்து தாக்கி, வீட்டி லிருந்த பொருள்களை கொள் ளையடித்துச் சென்றுள்ளார்கள்.

இச் சம்பவத்தில் படுகாயம டைந்த தாயும், மகனும் வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர்.

நாவற்குழி மேற்கிலுள்ள வீடொன்றுக்குள் நள்ளிரவில் புகுந்த திருடர்கள், வீட்டி லிருந்த தாயையும், மகனையும் கொடூரமாக தாக்கியுள்ளனர் திருடர்களின் தாக்குதலில் 17 வயதான மகனின் கை உடைந் துள்ளது. 42 வயதான தாயின் தலையில் காயம் ஏற்பட்டுள்ள தாக தெரியவந்துள்ளது.

காயமடைந்த தாயும் மகனும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றம் செய்யப்பட் டனர்.

# காணாமற்போனவர்களின் குடும்பங்களை சந்திக்கின்றது ஐரோப்பிய ஒன்றியக் குழு!

## இரண்டொரு தினங்களில் இந்த சந்திப்பு நடக்கும்

கொழும்பு, ஒக்.04

**இலங்கை வந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு உள்நாட்டு போரின் போது காணாமல் போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை சந்திக்க தீர்மானித்துள்ளது.**

எதிர்வரும் நாள்களில் இந்த சந்திப்பு இடம்பெறும் என கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் அலுவலகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் விஜயம் ஒக்ரோபர் 5 ஆம் திகதி நிறைவுபெறுவதற்கு முன்னர், காணாமல்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை சந்திக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வந்துள்ள குறித்த தூதுக்குழு, கடந்தவாரம் சிவில் சமூக குழுக்கள், எதிர்க்கட்சிகள், சிறுபான்மை சமூக பிரதிநிதிகள் மற்றும் வெளிவிவகார, தொழிலாளர் மற்றும் நீதி அமைச்சர்களையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அதிவேக நெடுஞ்சாலை மூலம் நாட்டை இணைக்கத் திட்டம்

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 04

வடக்கு ,தெற்கு ,கிழக்கு மற்றும் மேற்கு பிரதேசங்களை அதிவேக நெடுஞ்சாலை ஊடாக இணைக்க ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ எதிர்பார்ப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய பிராந்திப் பணிப்பாளர் கெனிச்சி யோக்கோயமாவிடம் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

நெடுஞ்சாலை அமைச்சர் பெர்ணான்டோவுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய பிராந்தியப் பணிப்பாளர் கெனிச்சி யோக்கோயமாவுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் நெடுஞ்சாலை அமைச்சில் நடைபெற்றது.

இலங்கையின் கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டம், வீதி பாதுகாப்பு, போக்குவரத்து நெரிசல் முகாமைத்துவ திட்டமொன்றை புதிதாக ஆரம்பித்தல் மேலும் புதிய வீதி அபிவிருத்தித் திட்டங்களைகளை ஆரம்பித்தல் என்பன தொடர்பாக இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இலங்கையின் நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்ட முன்னெடுப்பு தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய பிராந்திப் பணிப்பாளர் இதன்போது வினவியதோடு இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, வடக்கு, தெற்கு கிழக்கு மற்றும் மேற்குப் பிரதேச வீதிகளை நெடுஞ்சாலை ஊடாக இணைப்பதன் மூலமாக நாட்டை அபிவிருத்தியின் உச்சத்திற்கு



கொண்டு செல்ல ஜனாதிபதி கோட்டாபய எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார். அத்தோடு கிராமிய வீதி அபிவிருத்தி செயற்பாடுகள் வாயிலாக கிராமிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு உந்துசக்தி அளிக்க இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்காக பணிப்பாளர் சொன் வொன் இங்கு கருத்துத் தெரிவிக்கையில், தெற்காசியாவில் சிறந்த நெடுஞ்சாலையாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அமைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

மஹிந்த ஜனாதிபதியாக பணியாற்றிய காலப்பகுதியில் தற்போதைய ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ.ஜயசுந்தரவின் கோரிக்கைக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்ட முன்னுரிமை வீதி (I Road)திட்டம் வெற்றியளித்தது. பங்களாதேஷ் மற்றும் இந்தியாவில் கிராமிய வீதி அபிவிருத்திக்காக இந்த (I Road) மாதிரியே பயன்படுத்தப்படுவதாகவும் கலாநிதி சொன் வொன் குறிப்பிட்டார். சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைய 100000 கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் ஒரு இலட்சம் மரக்கன்று நடும் திட்டம் என்பன தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் பாராட்டு தெரிவித்தனர்.

மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்படும் துறைமுக பிரவேச வீதி தாமதமடைவது தொடர்பாகவும் ஆராயப்பட்டதோடு இந்த தாமதத்தை தடுக்க தேவையான தீர்மானங்கள் மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய பிராந்திப் பணிப்பாளர் கெனிச்சியோக் கோயமாவிடம் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர் ணான்டோ தெரிவித்தார்.

தற்போது இலங்கையில் வீதி அபிவிருத்தி முன்னேற்றம் மிக உயர்ந்த மட்டத்தில் இருப்பதால் எதிர்காலத்தில் இலங்கைக்கு உதவ ஆசிய அபிவிருத்தி வங்கி மிகவும் ஆர்வத்துடன் இருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் , அமைச்சரிடம் கூறினார்.

# எரிபொருள் விநியோக பிரச்னையை தீர்க்க ஓமானிடம் உதவிகோரும் இலங்கை அரசு

கொழும்பு, ஒக். 04

இலங்கையின் எரிபொருள் விநியோக பிரச்னையை தீர்ப்பதற்காக 3.6 பில்லியன் டொலர் நிதியுதவியைப் பெற இலங்கை அரசாங்கம் ஓமான் அரசாங்கத்துடன் ஒரு உடன்பாட்டை எட்டவுள்ளது.

குறித்த நிதியுதவிக்கு ஓமான் அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் இரு நாடுகளும் இந்த திட்டத்தை தொடர கொள்கை ரீதியாக ஒப்புக்கொண்டதாகவும் அரசாங்கத்தின் உயர்மட்ட தகவலை மேற்கோளிட்டு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது வரைபில் உள்ள இந்த ஒப்பந்தம் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐந்து வருட சலுகை மற்றும் 20 வருடங்களில் குறித்த கடனை திருப்பிச் செலுத்தும் வகையிலும் நிபந்தனைகளை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

12 மாத காலத்துக்கு எரிபொருளை வாங்கும் வகையில் 3.6 பில்லியன் டொலர் நிதி உதவி இலங்கை அரசாங்கத்துக்கு கிடைக்கும் என அரசாங்கத்தின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் இலங்கைக்கும் ஓமானுக்கும் இடையில் எந்தவொரு உடன்பாடும் எட்டப்படவில்லை என குறிப்பிட்டுள்ள எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, நாட்டில் பெற்றோல் மற்றும் டீசல் தட்டுப்பாடு என்ற செய்தியில் உண்மையில்லை என்றும் குறிப்பிட்டார்.

அண்மையில் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இந்தியாவுடன் எரிபொருள் கொள்வனவுக்காக நிதியுதவியை வழங்குவது குறித்து பேச்சுவார்த்தையில் அரசாங்கம் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தனியார் பஸ்களுக்கு பணியாளர்கள் இல்லை

கொழும்பு, ஒக். 04

பஸ் போக்குவரத்துப் பிரிவின் பணியாளர்கள் வேறு தொழில்களுக்குச் சென்றமையினால், பஸ் போக்குவரத்துப் பணியாளர்களுக்குப் பற்றாக் குறை காணப்படுவதாக இலங்கை தனியார் பஸ் உரிமை யாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித் துள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டமையினால், 50 ஆயிரம் பஸ் பணியாளர்களில் 30 ஆயிரம் வரையிலானவர்கள் சேவைக்கு வரவில்லை என்று விஜேரத்ன தெரிவித்தார்.

நீண்ட நாட்களாக வருமானம் எதுவும் கிடைக்காமையினால் அவர்கள் வேறு தொழில்களுக்குச் சென்றுள்ளதையடுத்தே இந்நிலைமை உருவாகியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதனால், தனியார் பஸ் போக்குவரத்து நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்க முடியாத நிலை உருவாகியுள்ளதாகவும், மாகாணங்களுக்குள் பயணிக்கு 6, 800 பஸ்களில் 800 பஸ்களே சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# மஹிந்த வீட்டு பூனை மாயம்!

கொழும்பு, ஒக். 04

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இளைய மகன் ரோஹித ராஜபக்ஷ, தனது செல்லப்பிராணியான பூனை காணாமல் போய்விட்டதாக முகநூலில் பதிவிட்டுள்ளார்.

ரோஹித ராஜபக்ஷ தனது முகநூலில், செல்லப் பிராணியாக வளர்க்கப்பட்ட பூனை காணாமல்போய்விட்ட தாகவும், பூனையைக் கண்டு பிடிக்க உதவும்படியும் கேட் டுள்ளார்.

இந்த பூனை துருக்கிய அங்கோரா குடும்பத்தைச் சேர்ந்தது என்று கூறப்படுகிறது.

# ஆசன எண்ணிக்கைக்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஒக். 04

ஆசன எண்ணிக்கைக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச்செல்லும் பஸ்களை மறு அறிவித்தல் வரை பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான பஸ்களின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

தனியாருக்கு சொந்தமான பஸ்கள் பயணிக்கும் அளவு ஒப்பீட்டளவில் குறைவாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று நிலை காரணமாக வேறு தொழில்களை நாடிச்சென்றுள்ள பஸ் சாரதிகள் மீண்டும் தொழிலுக்கு திரும்பாமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.




# இலங்கை அரசாங்கத்தை உறுத்தும் சாட்சியம் சேகரிக்கும் செயலகம்

**பனங்காட்டான்**

தமிழர்களின் முக்கால் நூற்றாண்டு கால இனப்பிரச்சனைக்கான தீர்வும், முள்ளிவாய்க்கால் போர்க்குற்றத்துக்கான நீதி விசாரணையும் இப்போது ஜெனிவாவிலும் ஐரோப்பிய ஒன்றியத்திலும் நிறுத்தப்பட்டுள்ளன.

சிங்கள தேசம் இந்த விவகாரங்களை திட்டமிட்டு மிகலாபகரமாக கையாள்கிறது. சிங்களத் தரப்பில் யார் ஆட்சிக்கு வந்தாலும் இவ்விடயத்தில் இவர்களின் செல்நெறிப் பாதை ஒன்றுதான். அது பிளவுபடாத சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம்.

தமிழர் தரப்பு 2001லிருந்து விரும்பியோ விரும்பாமலோ 2009 வரை ஒன்றாக நின்றது. பின்னர் இரண்டாகி, கடந்த பொதுத்தேர்தலில் மூன்றாகி, தமிழ் தேசிய இலக்கு என்பது தமிழ் ஆசன இலக்காக மாறி, மக்களை மாக்களாக்கி இழுத்துச் செல்கிறது.

சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பு, கஜேந்திரகுமார் தலைமையில் முன்னணி, விக்னேஸ்வரன் தலைமையில் கூட்டணி ஆகிய மூன்றும் தங்களை தமிழ்த் தேசியவாதிகள் என்று அடையாளம் காட்டி நிற்கின்றன. இவர்களிடம் மொத்தம் 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் போன்றவர்கள்.

இந்த வருட ஆரம்பத்தில் ஜெனிவாவுக்கு முதல் கடிதம் அனுப்பப்படும் போது அதில் மூன்று தலைவர்களும் ஒப்பமிட்டனர். அடுத்து, இரண்டாம்-மூன்றாம் கடிதங்கள் அனுப்ப வேண்டிய நேரத்தில் நீயா நானா என்று மீண்டும் பிரிந்து விட்டார்கள். அந்தக் கடிதங்களும் அனுப்பப்படவில்லை.

கடந்த மாதம் ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் 46ஆவது அமர்வு ஆரம்பிக்கையில் மீண்டும் கடித விவகாரம் முளைவிட்டது. இப்போது பிரச்னை கூட்டமைப்பின் பங்காளிகளுக்குள். ஒவ்வொருவரும் தங்களுக்குள் தனித்தனியாக ஒரு கூட்டை ஏற்படுத்தும் இலக்குடன் இது ஆரம்பமானது.

கூட்டமைப்பின் தோழமைக் கட்சிகளான ரெலோவும் புளொட்டும் தம்பாட்டில் ஒரு கடிதத்தை தயாரித்தனர். இதில் விக்னேஸ்வரன் கூட்டணியும் இணைந்தது. அவரது பங்காளிகளான சுரேஸ் பிரேமச்சந்திரனும், என். சிறிகாந்தாவும் சேர்ந்து கொண்டனர் (கூட்டமைப்பினரை பழிவாங்க நல்லதொரு சந்தர்ப்பம் விக்னேஸ்வரனின் கூட்டணிக்குக் கிடைத்தது). இந்த ஐவரும் ஒப்பமிட்ட கடிதம் முதலில் ஜெனிவாவுக்குப் பறந்தது.

கூட்டமைப்புக்குள் குறிப்பிட்ட ஒரு நோக்கத்துடன் உள்ளே நுழைக்கப்பட்டவர் "சு(ம்)மா" இருக்கவில்லை அவரும் ஒன்றைத் தயாரித்தார். இதில் விடுதலைப் புலிகள் போர்க்குற்றம் புரிந்தனர் என்ற தருஷ்மன் அறிக்கையின் வாசகம் வேண்டுமென்று திணிக்கப்பட்டதென்ற அடிப்படையில் தமிழரசுக் கட்சியினருக்குள் பிளவு ஏற்பட்டது.

இதனால் இன்னொரு கடிதத்தை தமிழரசுக் கட்சியின் எம்.பிக்களான சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கலையரசன் ஆகியோர் தயாரிக்க கூட்டமைப் பின் முன்னாள் எம்.பிக்களும் பிரமுகர்களுமென ஒன்பது பேர் ஒப்பமிட்டனர். இது ஜெனிவாவுக்கு சென்றதாகவும், செல்லவில்லையெனவும் சொல்லப்படுகிறது.

"சும்மா" கூட்டமைப்புக்குள் நுழைக்கப்பட்டவர் தாம் தயாரித்த கடிதம் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் பார்வைக்கு உட்பட்டது என்று கூறி அதுவே கூட்டமைப்பின் அதிகாரபூர்வ கடிதம் என்றும் சொன்னார். அதனை நிரூபிக்கும் வகையில் சம்பந்தனும் அதில் ஒப்பமிட்டு, கீழே தமிழரசு, ரெலோ, புளொட் எம்.பிக்களின் பெயர்களையும் பொறித்து (ஒப்பமின்றி) ஜெனிவாவுக்கு அனுப்பி வைத்தார்.

அன்றிலிருந்து ஆரம்பமான கூட்டமைப்புக்குள்ளான பிளவு இப்போது பல்கிப் பெருகி அறுகுபோல் வேரூன்றி, ஆலமரம்போல் விழுதெறிந்து.... பார்வைக்கு இப்படியாகி விட்டது. சொல்லப் போனால் அதனைத் தயாரித்த அந்த ஒருவரை ஓரம் கட்ட வேண்டுமென்ற முனைப்பில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான தோழன்புள்ள மாவை சேனாதிராஜாவும், செல்வம் அடைக்கலநாதனும், சித்தார்த்தனும் ஒன்றிணைந்து, தங்களுக்கு கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு என்றும் நாமம் சூட்டியுள்ளனர்.

இதன் அடுத்த கட்டமாக இந்த மும்மூர்த்திகளும் சம்பந்தனைச் சந்தித்து சமந்திரன் மீதான புகாரை பட்டியலிட்டு அவரின் காதுக்குள் ஓதியுள்ளனர். எப்போதும் கண்களை மூடியவாறிருக்கும் மகாதலைவர் புகாரினை உள்வாங்கினாரா அல்லது ஆள்துயிலில் இருந்தாரா என்பது சில நாட்களில் தெரியவரும்.

தமது குலதெய்வமான காளிதேவியின் வாகனம் எனக்கூறி சிங்கக் கொடி ஏந்தியவரும், எக்கராஜ்ய என்ற ஒற்றையாட்சியுள் தீர்வு கேட்பவரும் பிரிக்க முடியாத இரட்டையர்கள் என்ற நிலையில், தமிழர்களின் எதிர்காலம் இருப்பதே இன்றைய யதார்த்தம்.

ஜெனிவா தீர்மானத்தின் சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறையை எக்காரணம் கொண்டும் ஏற்க முடியாதென்று கோதபாய தரப்பு நிராகரிக்கும் அதே வேளையில், அதனை சர்வதேசத்திடம் வலியுறுத்த வேண்டிய தமிழ்த் தேசிய கட்சிகள் தமக்குள் பிரிந்து பிளந்து கூறுபட்டு, மூன்றாகி - நான்காகி - ஐந்தாகி அடிபட்டு தமிழினத்தை நலிவடையச் செய்து கொண்டிருப்பதை தாயக மக்கள் மட்டுமன்றி புலம்பெயர் உறவுகளும் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அடுத்த மாதம் தமது இரண்டாண்டை நிறைவு செய்யப்போகும் கோதபாய ராஜபக்ஷ முதற்தடவையாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அமர்வில் கலந்து கொண்டு தமது முடிவை அழுத்திச் சொன்னார். வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசும் இதனையே மீண்டும் மீண்டும் சொல்கிறார்.

2015ஆம் ஆண்டில் மனித உரிமைப் பேரவையில் 30:1 தீர்மானம் இலங்கை அரசின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டது. போர்க்குற்ற பொறுப்புக்கூறல், சர்வதேச நீதிவிசாரணைப் பொறிமுறை என்ற தீர்மானத்தை நிராகரித்த கோதபாய தரப்பு, கடந்த மாதம் நிறைவேற்றப்பட்ட 46:1 தீர்மானத்தையும் நிராகரித்துவிட்டது. உள்நாட்டுப் பிரச்னைகளை தீர்க்கும் பொறுப்பை சர்வதேசத்திடம் ஒப்படைக்க தாங்கள் ஒரு போதும் தயாரில்லை என்றும், இது நாட்டின் இறையாண்மைக்கு எதிரானது என்றும் சிங்கள மக்களுக்கு கேட்கும் வகையில் கோதபாய தரப்பு உரத்துக் கூறி வருகிறது.

2009ஆம் ஆண்டு மே மாதம் அன்றைய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனும், அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் கொழும்பில் வைத்து வெளியிட்ட கூட்டறிக்கையின் அடிப்படையிலேயே போர்க்குற்ற விவகாரம் ஜெனிவாவுக்குச் சென்றது என்பதை கோதபாயவும் ஜி.எல்.பீரிசும் மறந்துவிட்டனரோ அல்லது மறைத்து நடிக்கின்றனரோ தெரியவில்லை.

இறையாண்மை என்பது ஒரு நாட்டுக்கு அல்லது ஆட்சி புரியும் அரசுக்கு உண்டென்று கூறுவது போன்று இனங்களுக்கும் உண்டு. ஈழத்தமிழர் தங்களின் பூர்வீக நிலப்பரப்பில் காலாதிகாலமாக வாழ்ந்து வரும் இறையாண்மை கொண்டவர்கள். எண்ணிக்கையில் பெரும்பான்மை கொண்டவர்கள் என்பதால், எண்ணிக்கையில் குறைவானவர்களை நசுக்கி விட்டு தமக்கு மட்டுமே இறையாண்மை உண்டென்று கூற முடியாது.

ஒரு லட்சத்து நாற்பதாயிரத்துக்கும் அதிகமான மக்களைப் பலி கொடுத்த இறையாண்மையுள்ள ஓர் இனம், பத்தாண்டு களைத் தாண்டியும் உள்நாட்டின் விசாரணைப் பொறிமுறையில் நீதி கிடைக்காத நிலையில், சர்வதேசத்தின் உதவியோடு அவர்களிடம் நீதியை வேண்டுவதில் தவறென்ன? சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறையைக் கண்டு குற்றம் புரியவில்லை என்பவர்கள் எதற்காக அஞ்ச வேண்டும்?

மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் கடந்த மாதம் முன்வைத்த வாய்மூல அறிக்கையில், அவரது அலுவலகத்தில் இலங்கையின் போர்க்காலம் தொடர்பான 120,000 வரையான தரவுகளும் ஆவணங்களும் உள்ளன என்றும், மேலும் சேகரிக்கப்படுகின்றன என்றும் ஒரு தகவலை முதன்முறையாகப் பகிரங்கப்படுத்தினார்.

இவைகளைச் சேகரிக்கவும், பகுப்பாய்வு செய்யவும், எதிர்காலத் தேவைக்கென ஆவணப்படுத்தி பத்திரப்படுத்தவும் ஒரு செயலகம் தனியான உருவாக்கப்படுகிறது என்றும், இதில் பணிபுரியவென 13 துறைசார் அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர் என்றும் சுட்டியிருந்தார்.

இந்த விடயம்தான் இலங்கை அரசை உறுத்துகிறது. போர்க்குற்றம் இடம்பெற்றதாகக் கூறப்படும் காலத்தில் ஆட்சியில் இருந்தவர்கள்தான் தற்போது ஆட்சியில் இருக்கின்றார்கள்.

இதனாலேயே சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறையை இவர்கள் மறுக்கிறார்கள். தங்கள் மீதான குற்றங்களை நிரூபிக்கவே போர்க்குற்ற ஆவணங்கள் சேகரிக்கப்படுவதை, மனித உரிமைகள் ஆணையாளர் எதிர்கால தேவைக்காக பத்திரப்படுத்துவது என்று குறிப்பிட்டதாக இவர்கள் கருதுகிறார்கள்.

இவ்வேளையில் இலங்கை அரசாங்கத்துக்கு மறைமுகமாக உடந்தையாக செயற்படக்கூடிய வகையில், தமிழர் தரப்பு சிதைந்துபோய் ஊடக அமர்வுகளிலும் அறிக்கைப் போர்களிலும், பத்திரிகைகளுக்குப் படம் காட்டுவதிலும் காலத்தை அவமாக்குகிறது.

உண்மையைச் சொல்வதானால் இப்போது தமிழர்களுக்கு தலைவர் என்று அடையாளம் காட்ட ஒருவரையுமே காணவில்லை. கும்பகர்ண படலத்தில் ஒருவர். பேசிப் பேசியே பேச்சாளராகிய ஒருவர். கடிதத் தலைப்புகளுடன் தோழன்புள்ள தலைவர்கள். தமிழரசுக்குள்ளும் காளான் தலைவர்கள். சொல்லப் போனால் தரகர்களும் முகவர்களும் தமிழர் சமூகத்தில் அதிகமாகி விட்டனர்.

இறுதியில் சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறையால் இலங்கையின் இறையாண்மை பறிபோய்விடுமென்ற கூவிக் கூவி குளறுபவர்களுக்கு ஞாபகமூட்ட ஒரு சிறு குறிப்பு இது:

1959ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க பௌத்த பிக்கு ஒருவரால் படுகொலை செய்யப்பட்டார். 1963ஆம் ஆண்டில் பிரதமராகவிருந்த அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க தமது கணவரின் படுகொலை விசாரணைக்கென விசேட ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். எகிப்து நாட்டின் நீதிபதி அப்துல் யூனிஸ், கானா நாட்டின் நீதிபதி ஜி.எல். மில்ஸ்-ஒடோ ஆகிய இருவரும் இக்குழுவில் இடம்பெற்று விசாரணை நடத்தி அறிக்கையை சமர்ப்பித்தனர்.

இதனால் இலங்கையின் இறையாண்மை 62 ஆண்டுகளுக்கு முன்னரே பறிபோனதென்பது இன்றைய ஆட்சியாளர்களுக்குத் தெரியவில்லையா? ■

“ கம்சியின் பாடசாலைக் காலத்தில் அவர் இணைந்துகொண்ட தமிழ் இளையோர் அமைப்பு அவருக்கு அரசியல் அனுபவத்தையும் ஈடுபாட்டையும் கொடுத்தது. அதன் தொடர்ச்சியாக இளவயதில் நோர்வேத் தொழிற்கட்சியில் இணைந்தார். கட்சியின் இளையோர் அமைப்பில் அவர் முதலில் இணைந்து தனது ஆற்றலால் வேகமாக வளர்ந்து அநேகரது கவனத்தை ஈர்த்தார்.

# நோர்வேயின் அரசியலில் தமிழ் பெண் ஒருவரால் எவ்வாறு புதிய வரலாற்றை ஏற்படுத்த முடிந்தது?

**ஒஸ்லோவிலிருந்து தியாகராஜா விஜயேந்திரன்**



இலங்கையுடன் ஒப்பிடுகையில் சிறிய நாடான நோர்வேயில் கடந்தமாத நடுப்பகுதியில் நிகழ்ந்த தேர்தல் உலகெங்கும் வாழும் ஈழத் தமிழர்களது கவனத்தை ஈர்த்திருக்கிறது. நோர்வேயில் பொது மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் நான்கு வருடங்களுக்கு ஒருமுறையே நிகழ்வன. தேர்தல் எக்காரணம் கொண்டும் இடையில் நடாத்தப்பட மாட்டாது. பொதுத் தேர்தலுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலுக்கும் இடையில் இரு வருடங்கள் இடைவெளி இருக்கும். 54லட்சம் மக்களைக் கொண்ட நோர்வேயின் நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் இம்முறை ஒரு தமிழ்ப்பெண் (கம்சி குணரட்ணம்) வென்றதே அதற்கான காரணம்.

கம்சி குணரட்ணம் (இயற்பெயர் கம்சாயினி, 33) இலங்கையிற் பிறந்து தனது மூன்றாவது வயதில் தனது பெற்றோருடன் நோர்வேக்குக் குடிபெயர்ந்தவர். மிகவும் குளிர் நிறைந்த வடநோர்வேயில் அவரது பெற்றோர் கடினமான பணிகளில் தமது வாழ்வை நடத்தியிருந்தனர். இரு வருடங்களின் பின் கம்சியின் சிறுவயதிலேயே பெற்றோர் தலைநகர் ஒஸ்லோவுக்குக் குடிபெயர்ந்தனர். இன்றுவரை கம்சி ஒஸ்லோவிலேயே வாழ்கிறார். தனது பெயரால் அறியப்பட்டதைவிட, கம்சி எனும் பெயராலேயே பாடசாலைக் காலத்தில் இருந்து அறியப்பட்டவர் அவர். அரசியலில் தன்னை ஈடுபாடு கொண்டு பரவலாக அறியப்பட்ட போதும் அப்பெயரே பலராலும் ஊடகங்களாலும் பாவிக்கப்பட்டது. மூன்று வருடங்களுக்கு முன்னதாக கம்சாயினி எனும் பெயரை முற்றாகத் துறந்து கம்சி என்ற பெயரை உத்தியோக பூர்வமாகச் சூடிக்கொண்டார் அவர்.

கம்சியின் பாடசாலைக் காலத்தில் அவர் இணைந்துகொண்ட தமிழ் இளையோர் அமைப்பு அவருக்கு அரசியல் அனுபவத்தையும் ஈடுபாட்டையும் கொடுத்தது. அதன் தொடர்ச்சியாக இளவயதில் நோர்வேத் தொழிற்கட்சியில் இணைந்தார். கட்சியின் இளையோர் அமைப்பில் அவர் முதலில் இணைந்து தனது ஆற்றலால் வேகமாக வளர்ந்து அநேகரது கவனத்தை ஈர்த்தார். பதினெட்டு வயதில் ஒஸ்லோவின் மாநகராட்சிக்கு நிகழ்ந்த தேர்தலில் அவர் தொழிற்கட்சி சார்பாக நிறுத்தப்பட்டார். அவரது பத்தொன்பதாவது வயதில் ஒஸ்லோ மாநகராட்சி உறுப்பினராய்த் தேர்வானார்.

தொழிற்கட்சியின் இளையோர் அமைப்பில் முதலில் இணைந்த கம்சி, அதன் செயற்பாடுகளில் மிக்க ஆர்வத்தோடு பங்கெடுத்தார். அதன் விளைவாகத் தனது 21ஆவது வயதில் தொழிற்கட்சியின் ஒஸ்லோ இளையோர் அமைப்பின் தலைவரானார். நான்கு வருடங்களின் பின்னர் 2013இல் தொழிற்கட்சி பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்கு கம்சியை அதன் ஆலோசகராக நியமித்தது. 2014இல் தொழிற்கட்சியின் ஒஸ்லோக் கிளை கம்சிக்கு அதன் துணைத் தலைவர் பதவியை வழங்க விரும்பியது. தனது அனுபவம் போதாது எனக் கம்சி மறுத்தபோதும், கட்சி அவரை வற்புறுத்தி அப்பதவியை ஏற்கவைத்தது.

2015இல் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தொழிற்கட்சி தனது கூட்டணியுடன் ஒஸ்லோ மாநகர சபையின் ஆட்சியைக் கைப்பற்றியபோது கம்சி அதன் துணை முதல்வரானார். இது அவரது அரசியற் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாய் அமைந்தது. தலைநகரைப் பொறுத்தவரை கம்சி ஒரு தவிர்க்க முடியாத ஆளுமையானார். இவ்வருடம் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்தில் இருந்தே கம்சி தேசிய அரசியலுக்கு வருவது உறுதியாய்ப் பேசப்பட்டது. நோர்வேயின் மிகப்பெரிய கட்சியான தொழிற்கட்சியின் ஒஸ்லோ தேர்தல் மாவட்டத்துக்கான வேட்பாளர் பட்டியல் வெளியானபோது அது முழுமையாக உறுதி செய்யப்பட்டது.

மாநகராட்சியாகவும், அதேவேளை தேர்தல் மாவட்டமாகவும் உள்ள ஒஸ்லோவில் தொழிற்கட்சியின் பிரதமர் வேட்பாளருக்கு அடுத்த இடத்தில் கம்சியின் பெயரை நிறுத்தியதன் மூலம் அவரது நாடாளுமன்ற இடத்தைக் கட்சி உறுதி செய்தது. நோர்வே அரசியலில் ஒரு தமிழ்ப் பெண் நாடாளுமன்ற உறுப்பினராய் ஆகலாம் என்பதைக் கம்சி உறுதி செய்தார். அவரது வெற்றி நோர்வேயைப் பொறுத்தவரை மட்டுமல்ல, ஐரோப்பாவைப் பொறுத்தவரையிலே மிக முக்கியம் வாய்ந்தது. இலங்கையிற் பிறந்த ஒருவர் ஐரோப்பிய நாடு ஒன்றில் நாடாளுமன்றப் பிரதிநிதியாக வருவது இதுவே முதன்முறை.

நோர்வேயின் முக்கிய கட்சிகள் அனைத்திலும் சிறு எண்ணிக்கையிலேனும் வெளிநாட்டுப் பின்னணி கொண்டவர்கள் உள்ளனர். இவர்களிற் சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்களாயும், உள்ளூராட்சி அமைப்பு உறுப்பினர்களாயும் உள்ளனர். பாகிஸ்தான் போன்ற சில நாடுகளில் இருந்து வந்தவர்களோடு ஒப்பிடுகையில், கம்சியைத் தவிர்த்தால், தமிழரது அரசியல் ஈடுபாடு குறைவு என்றே கூறவேண்டும்.



தொகுதிவாரியாக அல்லாமல் தேர்தல் மாவட்ட அடிப்படையில் விகிதாசார முறைமையில் நிகழும் நோர்வேத் தேர்தலில் இம்முறை முக்கிய கட்சிகள் எனக் கருதப்படுபவை தமது வாக்காளர்களை ஓரளவு இழக்க, சிறிய கட்சிகள் பல இடங்களைக் கைப்பற்றியுள்ளன. மொத்தமாகப் பத்துக் கட்சிகள் நாடாளுமன்றில் அமரவுள்ளன. தமது பிரதேசத்தில் முழுமையான ஒரு மருத்துவமனை தேவை என்ற கோசத்தை முன்வைத்த ஓர் அமைப்பு தேர்தலில் ஒரு பட்டியலோடு போட்டியிட்டு ஓர் ஆசனத்தைக் கைப்பற்றிய நிகழ்வு வடநோர்வேயில் நிகழ்ந்துள்ளது. சூழல் பாதுகாப்பை முக்கியத்துவப்படுத்தும் கட்சிகளும், சிறிய இடதுசாரிக் கட்சியொன்றும் தம்மை முக்கியமான சக்திகள் எனத் தேர்தலில் நிறுவியுள்ளன.

இவ்வருடம் நோர்வே நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் சராசரி வயது 45.7, பிரதிநிதிகளில் 45.6 வீதமானோர் பெண்கள். 169 ஆசனங்களில் அமரவுள்ள உறுப்பினர்களில் பதினொருபேர் வெளிநாட்டுப் பின்னணி கொண்டவர்கள். அவர்களில் ஒருவர் தமிழர் என்ற வரலாறு ஒரு பெண்ணான கம்சியால் எழுதப்பட்டிருக்கிறது. ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம்

6. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

   மா பலா வாழை என்பன முக்கனிகளாகும்

7. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
   (i) ஆசிரியர் மாணவர்களுக்கு (அறிவுரை / அரிவுரை) கூறினார்.
   (ii) கழிவு நீர் தேங்கி நின்றதால் (துர்னாற்றம் / துர்நாற்றம்) வீசியது.
   (iii) களைகள் பயிர்களுக்கு (ஊரு / ஊறு) விளைவிக்கும்.


8. பின்வரும் வாக்கியத்தை எதிர்காலத்தில் எழுதுக.
   சூரியன் உதயமாகிறது.
   ........................................................................


9. பின்வருவனவற்றின் இளமைப் பெயரை எழுதுக.
   (i) பயிர் : .................................. (ii) வேம்பு : ..................................

10. 'நேர்பட ஒழுகு' என்னும் ஆத்திசூடியின் பொருளை எழுதுக.
   ........................................................................

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.
   (i) Lightening : ..................................
   (ii) History : ..................................

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.

   (i) 
   ..................................

   (ii) 
   ..................................


13. தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.
   (i) is / That / car / my : ..................................
   (ii) am / to / I / school / going : ..................................

14. 'விதுஹல்பதி' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.
   ........................................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.
   சோறு சாப்பிடுங்கள் : ..................................

16. | | |
    |---|---|
    | 7 | 0 |
    | 5 | 3 |

   கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக.
   : ..................................

17. 



   A, B, C, D ஆகிய நான்கு கோல்கள் உள்ள எண்சட்டம் அருகே தரப்பட்டுள்ளது.
   எந்தக் கோலில் உள்ள மணிகளினால் வகைகுறிக்கப்படும் பெறுமானம் 20 ஆகும்? : ..................................

18. கோலத்தின் வெற்றிடங்களில் வரவேண்டிய இரண்டு எண்களையும் எழுதுக.
   19, 22, .........., 28, ..........

19. தரப்பட்டுள்ள எண்களை **ஏறுவரிசையில்** எழுதுக.
   2470, 4756, 4125, 2765 : ..................................

20. விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு தொகைத் தோடம்பழங்களில் $\frac{3}{4}$ எஞ்சியிருந்தது. எஞ்சியிருந்த தோடம்பழங்களின் எண்ணிக்கை 57 எனின், விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட தோடம்பழங்கள் எத்தனை?
   : ..................................

21. பின்வரும் உருவில் $\frac{1}{4}$ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.



22. ஒரு தென்னந் தோட்டத்தில் இருந்து மூன்று தடவைகளில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கைகள் அருகே தரப்பட்டுள்ளன.

| தடவை | தேங்காய்களின் எண்ணிக்கை |
|---|---|
| முதலாம் | 2098 |
| இரண்டாம் | 3317 |
| மூன்றாம் | 2209 |

   (i) முதலாம், இரண்டாம் தடவைகளில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   : ..................................
   (ii) மூன்றாம் தடவையைவிட இரண்டாம் தடவை எத்தனை தேங்காய்கள் கூடுதலாகப் பறிக்கப்பட்டன?
   : ..................................

# அரசுக்குள் இருக்கும் சதிகாரர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க வலியுறுத்து

கொழும்பு, ஒக்.04

**“அரசு முன்னெடுத்து வரும் மக்கள் சார்பான ஆட்சியைச் சீர்குலைக்கும் சூழ்ச்சியாளர்கள் அரசுக்குள்ளேயே இருக்கின்றனர். இந்தச் சதிகாரர்களை அரசிலிருந்து உடன டியாக வெளியேற்ற வேண்டும்.”**



- இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க வலியுறுத்தினார்.

இவர்கள் அரசுக்குள் இருந்துகொண்டு அரசையே விமர்சித்து வருகின்றனர் எனவும், இது எந்த வகையிலும் பொருத்தமற்ற செயல் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- ”அரசு மக்கள் வழங்கிய மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துக்கமைய செயற்பட்டு வருகின்றது. அதனைச் சீர்குலைக்க அரசில் அங்கம் வகிக்கும் எவராலும் முடியாது.

சில அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், அமைச்சரவையில் எடுக்கப்படும் தீர்மானங்களை வெளியில் வந்து விமர்சிக்கின்றனர்.

இப்படியான நபர்கள் குறித்து மிகத் துரிதமாக தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும்.

தொடர்ந்தும் இந்தச் சூழ்ச்சியாளர்கள் அரசுக்குள் இருந்தால், அது அரசின் பயணத்துக்குத் தடையாக இருக்கும். எனவே, இந்தச் சதிகாரர்களை அரசிலிருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும்” - என்றார். (இ)

### மேல் மாகாணத்தில் திடீர் தேடுதல் 1,156 பேர் கைது

கொழும்பு, ஒக். 04

கொழும்பு உள்ளிட்ட மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப் பட்ட திடீர் பொலிஸ் சுற்றி வளைப்பு நடவடிக்கையில் பல் வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 1,156 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள் ளனர்.

பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைய நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் இந் தச் சுற்றுவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்போது நீதிமன்றங்க ளால் பிடியாணை பிறப்பிக்கப் பட்டிருந்த 531 பேரும், ஊழல் - மோசடிக் குற்றச் செயல்கள் தொடர்பில் 491 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப் பட்ட சந்தேகநபர்களை நீதி மன்றங்களில் ஆஜர்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர். (இ)

# மாற்றுத்திறனாளிகளுக்கு நடமாடும் வாக்களிக்கும் முறைமை வேண்டும்!

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 04

மாற்றுத்திறனாளிகள் வாக்க ளிப்பதற்கு நடமாடும் வாக்க ளிக்கும் முறையொன்று தயா ரிக்கப்பட வேண்டும் என்றும், பார்வையற்றவர்கள் ப்ரெயில் முறையின் கீழ் வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் புதிய மாற்றங்கள் மேற்கொள் ளப்பட வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா வலியுறுத்தினார்.

தேர்தல்களுக்கான வேட்பு மனுக்களைக் கையளிக்கும் போது சொத்துக்கள், பொறுப் புக்களை வெளிப்படுத்தும் பொறிமுறையொன்று நடை முறைப்படுத்தப்பட வேண்டும் என்ற தேர்தல் நடத்தைவிதி சட்டபூர்வமாக்கப்பட வேண் டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பா கப் பொருத்தமான சீர்திருத்தங் களை அடையாளம் காண்பதற் கும் தேவையான திருத்தங்க ளைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவைச் சந்தித்தபோதே அவர் இதனைக் கூறினார்.



தேர்தல்கள் ஆணைக்குழு வால் தயாரிக்கப்பட்டுள்ள ஊடக வழிமுறைகளை மீறும் ஊட கங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை தேர்தல் ஆணைக்குழுவுக்கே வழங்கு மாறும் நிமல் புஞ்சிஹேவா கேட்டுக்கொண்டார்.

தேர்தல் காலத்தில் வெகு ஜன ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்து வதற்கு உரிய வேலைத்திட்ட மொன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப் பிட்டார்.

பல்வேறு காரணங்களால் தொடர்ச்சியாகக் காலதாமதம டைந்து வரும் மாகாண சபைத் தேர்தல்களை விரைவில் நடத்து வதற்கு ஒத்துழைப்பு வழங்கு மாறு பாராளுமன்ற விசேட குழு வின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன, தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் கோரிக்கை விடுத்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் காணப்படும் வேட்பாளர்களின் வைப்புப் பணத்தை இரத்துச்செய் யும் நடைமுறை விரிவான திருத் தத்துக்கு உள்ளாக்கப்பட வேண் டும் என்றும் தேர்தல்கள் ஆணைக் குழு, பாராளுமன்ற விசேட குழுவில் சுட்டிக்காட்டியது.

வெளிநாட்டில் உள்ள இலங் கைப் பணியாளர்களின் வாக்குரி மையைப் பாதுகாக்கும் வகை யில் புதிய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் குறிப் பிட்டது. (இ)

# மூன்று வழிகளில் ஐ.தே.கவுக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு. ஒக். 04

ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை இம் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதற்கான திக தியை வழங்கியுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 20ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சிக்கு மிக முக்கியமான நாள் என்பதால் கட்சித் தலைவர் குறித்த நாளைத் தெரிவு செய் துள்ளார் என்று கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஒக்டோபர் 20ஆம் திகதி கட்சியின் நிறுவுநர் ஜெனரல் டி. எஸ். சேனாநாயக்கவின் பிறந்தநாள் என்பது குறிப்பிடத் தக்கது.

ரணில் விக்கிரமசிங்க மூன்று பிரிவுகளின் கீழ் கட்சி உறுப்பி னர்களை நியமிக்க முன்மொழிந் துள்ளார்.

அவற்றில் முதலாவது ஆயி ரம் உறுப்பினர்கள் அட்டை முறைமை, இரண்டாவது டிஜிட் டல் உறுப்பினர் அமைப்பு அல்லது ஒன்லைன் உறுப்பினர் முறைமை, மூன்றாவதாக வழக்கமான முறையில் கிராம



அளவில் உறுப்பினர்களைச் சேர்ப்பது.

இந்நிலையில், நாடு முழு வதும் அனைத்துக் கிராமங் களையும் உள்ளடக்கும் வகை யில் கட்சி உறுப்பினர்களை நியமிக்குமாறு ரணில் விக்கிரம சிங்க அறிவுறுத்தியுள்ளார் என்று அந்தச் செய்தியில் கூறப் பட்டுள்ளது.

இதேவேளை, தற்போதுள்ள அனைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களின் பதிவுகளையும் புதுப்பிக்க கட்சித் தலைவர் அறிவுறுத்தி யுள்ளார் என்றும் அந்தச் செய்தி யில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளது. (இ)

# 3 வாள்களுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 04

யாழ்., வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் விசேட அதிரடிப்படையினரால் வீடொன்றிலிருந்து வாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த வீட்டில் வாள்கள் உள்ளன எனக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் விசேட அதிரடிப் படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது மூன்று வாள்கள் மீட்கப்பட்டன.

இதையடுத்து மூன்று வாள்களையும் கையிருப்பில் வைத்திருந் தார் என்ற குற்றச்சாட்டில் மூளாய் தெற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்தனர்.

குறித்த சந்தேகநபர் விசாரணைக்காக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (இ- 03)

# வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த கும்பலின் கொடூர தாக்குதலில் வயோதிபர் மரணம்!

## சந்தேகத்தில் இளைஞர்கள் மூவர் கைது

பதுளை, ஒக். 04

வீடொன்றுக்குள் பலவந்த மாக நுழைந்த குழு ஒன்று அங் கிருந்த வயோதிபர் ஒருவரை அடித்துப் படுகொலை செய் துள்ளது.

இந்தச் சம்பவம் பதுளை, லிதமுல்ல பகுதியில் இடம்பெற் றுள்ளது எனப் பொலிஸ் ஊட கப்பிரிவு தெரிவித்துள்ளது.

இரும்புக் கம்பியால் குறித்த நபர் கொடூரமாகத் தாக்கப்பட் டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் பலத்த காய மடைந்த அவர், பதுளை வைத் தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

பதுளை, லிதமுல்ல பகுதி யைச் சேர்ந்த 65 வயதுடைய நபரே இந்தச் சம்பவத்தில் உயி ரிழந்துள்ளார். சம்பவம் தொடர் பில் பதுளைப் பகுதியைச் சேர்ந்த 21, 24 மற்றும் 31 வயதுகளை யுடைய இளைஞர்கள் மூவரைச் சந்தேகத் தில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (இ)

# பிரான்ஸை சமரசப்படுத்தும் தீவிர முயற்சியில் அமெரிக்கா

## அன்டனி பிளிங்கன் பாரிஸ் பறக்கிறார்

வாஷிங்டன், ஒக். 04

கடந்த மாதம் வாஷிங்டன் மற்றும் லண்டனுடனான உடன்படிக்கைக்கு ஆதரவாக அவுஸ்ரேலியா பிரெஞ்சு நீர்மூழ்கிக் கப்பல் ஒப்பந்தத்தை இரத்து செய்ததை அடுத்து அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் இடையேயான உறவுகள் வலுவிழந்தன.

இந்நிலையில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இன்று திங்கட்கிழமை பிரான்ஸ்க்கு செல்லத் திட்டமிட்டுள்ளார்.

இந்த விஜயத்தின்போது பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான கூட்டத்துக்கு தலைமை தாங்குவதுடன் பிரெஞ்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் என இராஜாங்க அமைச்சின்



ஊடகப்பேச்சாளர் கூறியுள்ளார்.

பிளிங்கனுடன் அமெரிக்க காலநிலை தூதுவர் ஜோன் கெர்ரி, அமெரிக்க வர்த்தக பிரதிநிதி கத்தரின் டாய் மற்றும் பாரிசில் உள்ள பிற அமெரிக்க அதிகாரிகள் கலந்து கொள்வார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் 15 ஆம் திகதி அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் இந்தோ-பசிபிக் பிராந்தியத்துக்கான ஒரு புதிய பாதுகாப்பு உடன்பாட்டைச் செய்து கொண்டன.

இந்த ஒப்பந்தம் காரணமாக பிரான்ஸிடமிருந்து நீர் மூழ்கிக் கப்பல்களை வாங்குவதற்கான 40 பில்லியன் டொலர் மதிப்புள்ள உடன்படிக்கையை அவுஸ்ரேலியா இரத்து செய்தது. இந்த நடவடிக்கை முதுகில் குத்தும் செயற்பாடு என பிரான்ஸ் கடுமையாக விமர்சித்திருந்தது.

இந்நிலையில் இரு நாடுகளின் உறவுகள் குறித்து ஆழமான ஆலோசனைகள் நடத்தப்படும் என பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுடனான தொலைபேசி அழைப்பில் ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் உறுதியளித்திருந்தார்.



## ஜப்பானின் புதிய பிரதமராக இன்று பொறுப்பேற்கிறார் புமியோ கிஷிடா

ரோக்கியோ, ஒக். 04

ஜப்பானின் ஆளும் லிபரல் டெமோக்ரடிக் கட்சியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புமியோ கிஷிடா இன்று திங்கட்கிழமை ஜப்பானிய பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

லிபரல் டெமோக்கிரட்டிக் கட்சி தலைமையிலான ஆளும் கூட்டணி இரு அவைகளிலும் பெரும்பான்மையைக் கொண்டுள்ளதால் 64 வயதான புமியோ கிஷிடா இன்று பாராளுமன்ற அமர்வில் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுவது உறுதியாகியுள்ளது.

இதேவேளை, புதிய பிரதமராக பொறுப்பேற்கவுள்ள புமியோ கிஷிடா, ஒக்ரோபர் 14 ஆம் திகதி பிரதிநிதிகள் சபையை கலைக்க திட்டமிட்டுள்ளார். இதனையடுத்து இவ்வாண்டு நவம்பர் 07 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படும் என தெரியவருகிறது.

ஜப்பானில் நடுத்தர வர்க்கத்தினரின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், ஏழை - பணக்காரர்களுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வைக் குறைக்கவும் தனது அரசு நடவடிக்கை எடுக்கும் என புமியோ கிஷிடா உறுதியளித்துள்ளார்.

அத்துடன், கொவிட் -19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வணிகங்களுக்கும் உதவ 10இலட்சம் கோடி யென் மதிப்புள்ள ஒரு பொருளாதார ஊக்குவிப்பு உதவித் திட்டம் தயாராக உள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, தனது அமைச்சரவை இறுதிப் பட்டியலை முடிவுறுத்த புமியோ கிஷிடா திட்டமிட்டுள்ளார். அவரது அமைச்சரவையில் முன்னாள் கல்வி அமைச்சர் ஹிரோகாசு மாட்சுனோ தலைமை அமைச்சரவைச் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார்.

முன்னாள் சுற்றுச்சூழல் அமைச்சர் சுனிச்சி சுசுகி நிதி அமைச்சராக பொறுப்பேற்க வாய்ப்புள்ளது என ஜப்பானிய ஊடகங்கள் தெரிவித்தன.

# விரைவில் சந்தைக்கு வரவுள்ள கொரோனா தடுப்பு வில்லைகள்!

நியூயோர்க், ஒக். 04

கொவிட் வைரஸ் தாக்கத்திற்கு உள்ளாவோரை குணப்படுத்தும் வகையில், முதல் தடவையாக மருந்து வில்லையொன்று அமெரிக்காவின் மார்க் மருந்து உற்பத்தி நிறுவனம் தயாரித்துள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

கொவிட் தொற்றை குணப்படுத்தும் மருந்துகளை கண்டுபிடிக்கும் முயற்சியில் பல நாடுகள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றன.

இதன்படி "மொல்னுபியவிர்" என்ற பெயரிலான மருந்து வகையை கொவிட் தடுப்புக்குப்



பயன்படுத்தும் வில்லைகளாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ள நோயாளருக்கு மட்டும் இந்த மருந்து வில்லை வழங்கவேண்டும் என நிறுவனம் சிபாரிசு செய்துள்ளது.

அத்துடன், மருத்துவ ஆலோசனைகளுடன் வீடுகளிலும் குறித்த வில்லைகளைப் பயன்படுத்த முடியும் என அந்த நிறுவனம் கூறியுள்ளது. கொவிட் தொற்றுக்குள்ளாகும் ஒருவரை, வைத்தியசாலையில் அனுமதிக்கும் நிலைக்கு கொண்டு செல்வதை, இந்த மருந்து தடுக்கும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



## கருக்கலைப்பு உரிமையை வலியுறுத்தி 50 அமெரிக்க மாநிலங்களிலும் பேரணி

நியூயோர்க், ஒக். 04

கருக்கலைப்பு உரிமையை வலியுறுத்தி பல்லாயிரக் கணக்கான மக்கள் அனைத்து 50 அமெரிக்க மாநிலங்களிலும் பேரணிகளை நடத்தி வருகின்றனர்.

கருக்கலைப்பை சட்ட ரீதியாக கட்டுப்படுத்தும் டெக்சாஸ் மாநிலத்தின் புதிய சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்கா முழுபதும் இவ்வாறு பல்லாயிரக்கணக்கானவர்கள் திரண்டுள்ளனர்.

உத்தேச புதிய சட்டத்திருத்தம் 6 வாரங்களுக்கு மேற்பட்ட கருவை கலைப்பதை தண்டனைக்குரிய குற்றமாக்குகிறது. அவ்வாறு கருக்கலைப்பு செய்யும் மருத்துவர்கள் மீது வழக்குத் தொடுக்கும் உரிமையையும் வழங்குகிறது. குடியரசுக் கட்சி ஆதிக்கம் செலுத்தும் மாநிலங்களில் உள்ள அரசியல்வாதிகள் இதே போன்ற சட்டரீதியான கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து பரிசீலித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையிலேயே கருக்கலைப்பு உரிமையை வலியுறுத்தியும் சட்டரீதியாக அதனைக் தடுக்க வேண்டாம் என வலியுறுத்தியும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அனைத்து 50 அமெரிக்க மாநிலங்களிலும் பேரணிகளை நடத்தி வருகின்றனர்.

# ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவுக்கு எதிராக பிறேசில் முழுவதும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்!

பிறேசிலியா, ஒக். 04

பிறேசில் முழுவதும் உள்ள நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு அந்நாட்டு ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரேசில் பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடம் உள்ள நிலையில் எதிர்க்கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டங்கள் இடம்பெற்றன.

தற்போதைய கருத்தக் கணிப்புக்களில் ஜெய்ர் போல்சனாரோ கடுமையான பின்னடைவைச் சந்தித்துள்ளார்.

பிறேசிலில் தொற்று நோயைச் சரியாகக் கையாளவில்லை என்ற கடும் விமர்சனங்கள் ஜெய்ர் போல்சனாரோ மீது முன்வைக்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாடில்லாத போக்கு காரணமாகவே சுமார் 600,000 இற்கும் அதிகமான மக்கள் இறந்துள்ளதாகவும் இதற்கு ஜெய்ர் போல்சனாரோ அரசே காரணம் எனவும் மக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.




இந்நிலையில் நேற்று முன் தினம் சனிக்கிழமை 160 இற்கும் மேற்பட்ட நகரங்களில் ஜெய்ர் போல்சனாரோவுக்கு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

போல்சனாரோவை பதவி நீக்கம் செய்யுமாறு அழைப்பு விடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

பசி, வறுமை, ஊழல் மற்றும் தொற்று நோயை ஒழிக்கவும் ஜனநாயகத்தை பாதுகாக்கவும் நாங்கள் களமிறங்கியுள்ளோம் என போராட்டத்தின் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களின் போது சில இடங்களில் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவின் உருவ பொம்மைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தீவைத்து எரித்தனர்.

கடந்த மாதம் போல்சனாரோவுக்கு ஆதரவாக இடம்பெற்ற பேரணிகளைத் தொடர்ந்து இந்த மாபெரும் எதிர்ப்புப் பேரணி இடம்பெற்றது.



ஜெய்ஸ்வால், ஷிவம் துபே அதிரடி

## சென்னையை வீழ்த்தி ராஜஸ்தான் வெற்றி

இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் 47ஆவது போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 07 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 04 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அணி சார்பில் அதிகப்படியாக ருதுராஜ் கெய்வாட் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க பந்துவீச்சில் ராஜஸ்தான் அணியின் ராகுல் தெவாடியா 03 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இந்நிலையில், 190 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் 17.3 ஓவர்கள் நிறைவில் 03 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணிசார்பில் அதிகபடியாக ஷிவம் துபே ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களையும் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய ஜெய்ஸ்வால் 50 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஷர்துல் தாகூர் இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.



## மும்பையை 4 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது டெல்லி அணி

இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் 46ஆவது போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 04 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங் களை பெற்றுக்கொண்டது.

இந்நிலையில், 130 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி 19.1 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணி சார்பில் அதிகபடியாக ஸ்ரேயாஷ் ஐயர் 33 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க பந்துவீச்சில் மும்பை இந்தியன்ஸ் அணியின் ட்ரென்ட் போல்ட், ஐயன்ட் யாதவ், க்ருணல் பாண்ட்யா, பும்ரா மற்றும் நதன் குல்டர்நைல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

# இலங்கை கிரிக்கெட்டின் திட்டங்களில் பின்னடைவு

ஒழுக்காற்று விதிகளை மீறிய மைக்காக மூன்று பிரதான வீரர்கள் தடைக்குட்பட்டதன் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டுக்கான இலங்கை கிரிக்கெட்டின் திட்டங்களில் பாரிய பின்னடைவு ஏற்பட்டது.

எனினும், அந்தப் பின்னடைவுக்கு மத்தியில் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்துக்கு தயாராகி வரும் இலங்கை அணியில் ஏனையவர்கள் இணைவதற்கான வாயில் திறக்கப்பட்டுள்ளதாக தலைமைப் பயிற்றுநர் மிக்கி ஆர்த்தர் தெரிவித்தார்.

ஐக்கிய இராச்சியத்திலும் ஓமானிலும் இந்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி இருபது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்குத் தயாராகும் பொருட்டு இலங்கை அணி, ஓமானில் 2 போட்டிகளில் விளையாடுவதற்கு நேற்று பிற்பகல் ஓமான் நோக்கி புறப்படுவதற்கு முன்னர் மிக்கி ஆர்த்தர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இங்கிலாந்துக்கான கிரிக்கெட் விஜயத்தின்போது ஒழுக்க விதிகளை மீறும் வகையில் டர்ஹாம் வீதியில் அலைந்து திரிந்த நிரோஷன் டிக்வெல்ல, குசல் மெண்டிஸ், தனுஷ்க குணதிலக்க ஆகிய மூவரும் தடைக்குட்பட்டமை மறக்க முடியாத ஒரு கசப்புணர்வு என மிக்கி ஆர்த்தர் குறிப்பிட்டார்.

‘அது இலங்கைக்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்திவிட்டுள்ளது. ஆனால், தினேஷ் சந்திமால், பானுக்க ராஜபக்ஷ, சரித் அசலன்க, கமிந்து மெண்டிஸ் போன்ற வீரர்களுக்கு வாயில் திறக்கப்பட்டுள்ளது’ என மிக்கி ஆர்த்தர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தற்போதைய இலங்கை குழாத்தில் இடம்பெறும் வீரர்கள் விரைவாக தம்மை தயார்ப்படுத்திக்கொள்ளக் கூடியவர்களாகவும் எதற்கும் வளைந்து கொடுக்க கூடியவர்களாகவும் இருப்பது திருப்தி அளிப்பதாக அவர் மேலும் கூறினார்.



‘ஐக்கிய அரபு இராச்சியத்தில் தற்போது நடைபெற்றுவரும் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளை நான் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன். ஏனெனில் அதே ஆடுகளங்களில்தான் இருபதுக்கு 20 உலகக் கிண்ணப் போட்டிகளில் நாங்களும் விளையாடவுள்ளோம்.

எனவே, 2 வேகப்பந்து வீச்சாளர்கள், 2 சுழற்பந்து வீச்சாளர்கள், சகலதுறை வீரர்கள் மற்றும் முன்வரிசை துடுப்பாட்ட வீரர்களில் பகுதிநேர சுழற்பந்து வீச்சாளர் ஆகியோருடன் போட்டிகளை எதிர்கொள்ள எண்ணியுள்ளோம்.

அந்த ஆடுகளங்களுக்கு ஏற்ப எமது அணியினால் மாற்றிக்கொள்ள, வளைந்துகொடுக்க முடியும்’ என தலைமைப் பயிற்றுநர் ஆர்த்தர் தெரிவித்தார்.

‘ஒரு வாரத்துக்கும் மேலாக எமது துடுப்பாட்டம் குறித்து நாங்கள் கூடுதல் கவனம் செலுத்தினோம். அதற்கு கடுமையான பயிற்சிகளை வழங்கினோம். மூன்று பயிற்சிப் போட்டிகளில் விளையாடியதுடன் வீரர்களின் துடுப்பாட்ட திறன்களை மேம்படுத்த விசேட பயிற்சிகள் நடத்தப்பட்டது.

எமது பந்துவீச்சும் களத்தடுப்பும் வெகுவாக முன்னேறியுள்ளது. எனவே, எமது துடுப்பாட்டம் பிரகாசித்தால் அது எமக்கு அநுகூலமாக அமையும்’ என்றார் அவர்.

ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் முதலாவது சுற்றில் (தகுதிகாண்) ஏ குழுவில் இடம்பெறும் இலங்கை தனது ஆரம்ப போட்டியில் நமீபியாவை அபு தாபியில் எதிர்வரும் 18ஆம் திகதி எதிர்த்தாடவுள்ளது.அதனைத் தொடர்ந்து அயர் லாந்தை அபு தாபியில் 20ஆம் திகதி யும் நெதர்லாந்தை ஷார்ஜாவில் 22ஆம் திகதியும் இலங்கை எதிர்த் தாடும்.

எதிர்வரும் 17ஆம் திகதி முதல் நவம்பர் 14ஆம் திகதிவரை நடைபெறவுள்ள ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்பதாக 4 பயிற்சிப் போட்டிகளில் இலங்கை விளையாடவுள்ளது.

இலங்கையின் முன்னாள் அணித் தலைவர் டுலீப் மெண்டிஸை தலைமைப் பயிற்றுநராகக் கொண்ட ஓமான் அணியுடன் எதிர்வரும் 7ஆம் திகதியும் 9ஆம் திகதியும் 2 பயிற்சிப் போட்டிகளில் இலங்கை விளையாடும்.

உபாதை மற்றும் கொரோனாவிலிருந்து மீண்டு பூரண குணமடைந்துள்ள குசல் மெண்டிஸ், ஐ.பி.எல் போட்டிகளில் தற்போது விளையாடிவரும் வனிந்து ஹசரங்க டி சில்வா, துஷ்மந்த சமீர ஆகியோர் இந்தப் பயிற்சிப் போட்டிகளில் விளையாடமாட்டார்கள்.

ஹசரங்கவும் சமீரவும் இலங்கை குழாத்துடன் எதிர்வரும் 10ஆம் திகதி இணையவுள்ளனர்.

ஐ.சி.சியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரண்டு பயிற்சிப் போட்டிகளில் எதிர்வரும் 14ஆம் திகதியும் 16ஆம் திகதியும் இலங்கை விளையாடும்.

## இலங்கை ‘ஏ’ கிரிக்கெட் அணியின் பயிற்றுநராக ருமேஷ் ரத்நாயக்க

இலங்கை “ஏ“ கிரிக்கெட் அணியின் பிரதான பயிற்றுநராக இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ருமேஷ் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இம்மாதம் இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுலா மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் “ஏ“ கிரிக்கெட் அணிக்கெதிரான தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை “ஏ“ கிரிக்கெட் அணிக்கு தலைமை பயிற்றுநராக ருமேஷ் ரத்நாயக்க செயற்படவுள்ளார்.

இவர், இதற்கு முன்னரும் இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுநர் மற்றும் வேகப் பந்துவீச்சு பயிற்றுநர் போன்ற பல்வேறு பொறுப்புக்களை வகித்துள்ளார்.

தலைமை பயிற்றுநர் ருமேஷ் ரத்நாயக்கவுக்கு பக்க பலமாக, துடுப்பாட்ட பயிற்றுநராக ருவின் பீரிஸையும், பந்துவீச்சு பயிற்றுநராக தர்ஷன கமகேவையும், சுழற்பந்துவீச்சு பயிற்றுநராக சஜீவ வீரகோனையும் ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனம் நியமித்துள்ளது.

பாகிஸ்தான் “ஏ“ கிரிக்கெட் அணிக்கெதிராக இலங்கை “ஏ“ கிரிக்கெட் அணி 4 நாட்கள் கொண்ட 2 உத்தியோகபற்றற்ற டெஸ்ட் போட்டிகளிலும், உத்தி யோகற்றற்ற 3 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடவுள்ளன.





## இலங்கை ரி-20 உலகக்கிண்ண அணியில் மேலும் ஐந்து வீரர்கள் சேர்ப்பு!

ரி-20 உலகக்கிண்ண தொடருக்கான இலங்கை அணியில், மேலதிகமாக ஐந்து வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, மினோத் பானுக, ரமேஷ் மெண்டிஸ், பெத்தும் நிசங்க, லக்ஷன் சந்தகன் மற்றும் அஷென் பண்டார ஆகியோர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அதேவேளை, முன்னதாக செப்ரெம்பர் நடுப்பகுதியில் அறிவிக்கப்பட்ட அணியில் இடம்பெற்றிருந்த லஹிரு மதுசங்க, காயத்தில் இருந்து மீண்டு வருவதால் அணியுடன் அவர் இணையமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தசுன் சானக தலைமையிலான அணியில், தனஞ்சய டி சில்வா, குசல் ஜனித் பெரேரா, தினேஷ் சந்திமால், அவிஷ்கா பெர்னாண்டோ, பானுகா ராஜபக்ஷ, சரித் அசலங்க, வனிந்து ஹசரங்க, கமிந்து மெண்டிஸ், சாமிகா கருணாரத்ன, நுவன் பிரதீப், துஷ்மந்த சமீர, பிரவீன் ஜெயவிக்ரம, மகேஷ் தீக்ஷன, மினோத் பானுக, ரமேஷ் மெண்டிஸ், பெத்தும் நிசங்க, லக்ஷன் சந்தகன், அஷேன் பண்டார ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மேலதிக வீரர்களாக லஹிரு குமார, பினுரா பெர்னாண்டோ, அகில தனஞ்சய, புலின தரங்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# தடுப்பூசி போடாதோர் யாழிலேயே அதிகம்

யாழ்ப்பாணம், ஒக். 04

பல்வேறு காரணங்களுக்காக நாட்டிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட 85 ஆயிரம் பேருக்கு எந்தவிதமான கொரோனாத் தடுப்பூசியும் வழங்கப்படவில்லை என்று கொரோனாத் தடுப்புச் செயலணி தகவல் வெளியிட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வசிப்பவர்கள் என்றும், அந்த எண்ணிக்கை 20 ஆயிரம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



இது ஆபத்தான நிலை என்று சுகாதாரத் துறையின் பிரதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், தடுப்பூசி போடாதவர்களுக்கு வீட்டிலேயே தடுப்பூசி போடுவதற்கு அரசு கவனம் செலுத்தியுள்ளது.

தடுப்பூசி பெற்றவர்கள் மற்றும் பெறாதவர்களின் விசேட கணக்கெடுப்பை நடத்த கொரோனாத் தடுப்புச் செயலணி தீர்மானித்துள்ளது.

நாடு திறந்த பின்னர் சுகாதார வழிகாட்டுதல்கள் முறையாகச் செயற்படுத்தப்படுகின்றதா என்பதைச் சரிபார்க்க ஒரு தனிப் பொறிமுறையை அமைக்குமாறு சுகாதாரத்துறை பிரதானிகளை செயலணி அறிவுறுத்தியுள்ளது. (இ)

# மனைவியின் சகோதரனால் தாக்கப்பட்டவர் உயிரிழப்பு!

காத்தான்குடி, ஒக். 04

குடும்பத் தகராறில் தாக்கப்பட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நபர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புதிய காத்தான்குடியில் வசித்து வந்த 28 வயதுடைய முஹம்மது முஸ்பீர் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மனைவிக்கும் கணவனுக்கும் இடையில் பிரச்னை ஏற்பட்டபோது, மனைவியின் சகோதரன் இவரைத் தாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது காயமடைந்த நபர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே, நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக இவரைத் தாக்கியதாக தெரிவிக்கப்படும் இவரின் மனைவியின் சகோதரனைக் காத்தான்குடிப் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (இ)

# குளவிக் கொட்டுக்கு இலக்கான ஐந்து பேர் வைத்தியசாலையில்

பதுளை, ஒக். 04

பதுளை மாவட்டம், ஹல்துமுல்ல - களுப்பான கல்பிட்டி பகுதியில் குளவிக்கொட்டுக்கு இலக்கான 5 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று பம்பரகந்தை நீர்வீழ்ச்சியைப் பார்வையிடச் சென்றிருந்த நிலையில் இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்நிலையில், குளவிக் கொட்டுக்கு இலக்கான ஐந்து பேரும் ஹல்துமுல்ல வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ)

# ஆசிரியர் தினத்தன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்

## ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு

**கொழும்பு, ஒக்.04**

**சர்வதேச ஆசிரியர் தினமான எதிர்வரும் 6ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.**




எவ்வாறான தடை வந்தாலும் திட்டமிட்டவாறு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பாடசாலைகளுக்கு வரவேண்டுமாயின் தற்போதுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும், அதற்கமையவே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் கூறினார். 312 தொகுதி கல்வி காரியாலயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த மாபெரும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறைச்சாலை அதிகாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 04



பாதாள உலகக் குழுவினர் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களை சிறைச்சாலைகளில் செயற்பட அனுமதிக்கும் சிறை அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

சிறைவாசம் அனுபவித்து வரும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்தோர் சிறையிலிருந்து தங்கள் வலையமைப்பை செயல்படுத்துதல் உட்பட சட்டவிரோத நடவடிக்கைகள் சிறை அதிகாரிகளின் நடத்தையைப் பொறுத்தே இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறைச்சாலை அதிகாரிகளின் முன்மாதிரியான நடத்தை மூலம் அவர்களின் தொழில் கௌரவத்தை பாதுகாக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்யத் தவறியவர்கள் பணி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# மேலும் 652 பேர் பூரண குணம்

கொழும்பு, ஒக். 04

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 652 பேர் பூரண குண மடைந்து நேற்று ஞாயிற்றுக் கிழமை வீடுகளுக்கு திரும்பி யுள்ளனர்.

இதனையடுத்து, கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 59 ஆயிரத்து 298ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் 5 இலட்சத்து 19 ஆயிரத்து 630 பேருக்கு இதுவரையில் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

மேலும், தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 19 ஆக பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு கோப் குழு மீண்டும் அழைப்பு

கொழும்பு, ஒக். 04

கோப் எனப்படும் அரச பொறுப்பு முயற்சிகள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழு, ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 7ஆம் திகதி குறித்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் முன்னிலையாகுமாறு ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ஸ்ரீலங்கன் விமான சேவை கோப் குழுவில் கடந்த ஜூலை மாதம் 7ஆம் திகதி முன்னிலையாகியிருந்தது.

அதன்போது, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் தொடர்ச்சியாகக் கலந்துரை யாடுவதற்காகவே இவ்வாறு மீண்டும்அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ)

# மின்சாரம் தாக்கி பெண் மரணம்!

இரத்தினபுரி, ஒக். 04

இரத்தினபுரி மாவட்டம், சமரகந்த - எந்தானை பிரதேசத்தில் உள்ள தேயிலைத் தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட மின் கசிவால் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் சமரகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதான பெருமாள் சரஸ்வதி என்ற பெண்ணே உயிரிழந்தார். (இ)

# பொலிஸாரை திட்டிய அதிகாரிக்கு இடமாற்றம்

கொழும்பு, ஒக். 04

தனது சாரதி அனுமதிப் பத்திரத்தைச் சோதித்த பொலிஸ் அதிகாரியைத் திட்டிய சம்பவம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான காணொளி, தற்போது சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகின்றது.

செயலாளரும் அவரது மனைவியும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்துக் கொண்டிருந்தபோது, பொலிஸ் அதிகாரி ஒருவர், தகவல் பெறுவதற்காக, அவரது சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கேட்டுள்ளார்.

இதன்போது, பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி என்று கூறிக்கொள்ளும் அந்த நபரும், அவரது மனைவியும் பொலிஸ் அதிகாரியைத் திட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை, குறித்த அதிகாரி, மற்றும் அவர்களுக்குத் தொலைபேசியில் தெரிவிப்பதையும் வீடியோவில் தெரியவந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் விசேட வைத்திய நிபுணர்களுக்குப் பற்றாக்குறை

முல்லைத்தீவு, ஒக். 04

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் விசேட வைத்திய நிபுணர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் முல்லைத்தீவு கிளை செயலாளர் வைத்தியர் சித்திர வேலாயுதம் பாலவினோதன் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொது மருத்துவம், சத்திர சிகிச்சை, குழந்தை மருத்துவம் மற்றும் மகப்பேற்று ஆகிய விசேட துறையில் தலா இரண்டு வெற்றிடங்கள் நிலவுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் நோயாளிகளை வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் வைத்தியர் சித்திர வேலாயுதம் பாலவினோதன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

## கூட்டமைப்புக்களை...

கிடையே அல்லது அவற்றுக்குள்ளே இருக்கக்கூடிய பிணக்குகளுக்குள் தலையிடுவதோ, அல்லது அவற்றை ஆராய்வதோ இந்த முன்னெடுப்பின் இலக்கு அல்ல" என நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதி. வண. கலாநிதி கி. நோயல் இம்மானுவேல், திருகோணமலை, தென் கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார் ஆகியோரின் முன்னெடுப்பில் இடம்பெறும் இந்த முயற்சி தொடர்பில் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:

பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்தொருமித்து ஈழத்தமிழர் கூட்டுரிமைகளை உலக அரங்குக்கு முன்னெடுக்கத் தகுந்த அணுகுமுறையொன்றை, ஆராய்ந்து வகுக்கும் பணிக்கு, பரந்துபட்ட வரவேற்பும் பங்கேற்பும், செயற்பாட்டு முயற்சி அறிவிக்கப்பட்ட எட்டு நாட்களுக்குள் கிடைத்திருப்பது, வடக்கு-கிழக்கில் உள்ள வரலாற்றுத் தேவையை மட்டுமல்ல, மக்களின் ஆதங்கத்தையும் வேணவாவையும் வெளிப்படுத்துகின்றது.

முதலாவதாக, இந்த முயற்சியின் பிரதான இலக்கு, ஈழத்தமிழர்களின் தேசிய அரசியற் கூட்டுரிமைகளையும் கூட்டுக் கோரிக்கைகளையும் மக்கள் தமது பாராளுமன்ற உறுப்பினர்களுடன், பங்குபெறு மக்களாட்சி முறையில், உரிய வெளிப்படைத்தன்மையோடு ஊடாடி, அவற்றுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆணையைக் கொடுத்து, சர்வதேசப் பரப்பு உள்ளடங்கிய பொதுவெளியில், நம்பகமான முறையில், மக்களாட்சி அறத்திற்குட்பட்டு, காலந்தவறாது வெளிப்படுத்தச் செய்வதற்குரிய சட்டகத்தை உருவாக்குதலே என்பதை இங்கு தெளிவுபடுத்தவிரும்புகிறோம்.

இதைத் தவறாக, தமிழ் அரசியல் கட்சிகளை, அல்லது கூட்டமைப்பு மற்றும் முன்னணிகளை, கட்டமைப்பு ரீதியாக இணைக்கும் முன்னெடுப்பாக விளங்கிக் கொள்ள வேண்டாம் என்பதைச் செயற்குழு அழுத்தம் திருத்தமாகத் தெளிவுபடுத்த விரும்புகிறது. தேர்தல் அரசியலின் நெளிவு சுழிவுகளுக்குள் நுழைவதோ, கட்சிகளுக்கிடையே அல்லது அவற்றுக்குள்ளே இருக்கக்கூடிய பிணக்குகளுக்குள் தலையிடுவதோ, அல்லது அவற்றை ஆராய்வதோ இந்த முன்னெடுப்பின் இலக்கு அல்ல.

எதிர்காலத்தில், தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உரிய படிமுறைகளில் உள்வாங்கிச் செயற்படுத்தக் கூடிய வகையில், இதன் ஆய்வெல்லைகள் ஆரம்பத்திலேயே விரிவுபடுத்தப்பட்டிருக்கும் என்பதையும் மக்களுக்கு அறியத்தர விரும்புகின்றோம்.

செயற்குழுவின் பூர்வாங்கத் திட்டமிடற் செயற்பாடுகளை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கும், வடக்கு-கிழக்கு இணைந்த இம் முன்னெடுப்பின் பொதுத் தொடர்புகளைக் கையாள்வதற்குமான சட்டத்தரணிகள் குழுவை, இம் முன்னெடுப்பைப் பொது முயற்சியாக ஆரம்பித்தவர்கள் நியமித்துள்ளனர். பன்முகப்பட்டு, பல மாவட்டங்களில் இருந்தும், பாற் சமநிலையோடு சட்டத்தரணிகளின் பங்களிப்பு இருக்கவேண்டும் என்ற விருப்போடு, மூவருக்குப் பதிலாக, ஐவர் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக, இளம் தலைமுறையினரின் பங்கேற்பு ஊக்குவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, பட்டறிவு கொண்ட சட்டத்தரணிகளும் பங்கேற்கிறார்கள். மேலும் சில சட்டத்தரணிகள் ஆர்வம் காட்டியுள்ளனர். வேறு துறைசார்ந்தவர்களும் ஈடுபாட்டுக்கான விருப்பை வெளியிட்டுள்ளனர்.

பூர்வாங்கச் செயற்குழு, மற்றும் பொதுத் தொடர்புக் குழு, ஆகிய இரண்டும் இணைந்ததே ஒட்டுமொத்த முன்னெடுப்பின் செயற்குழு ஆகும். இச் செயற்குழு தன்னை ஆரம்பித்தவர்களோடு இணைந்தே மக்களாட்சி அறத்துக்கிணங்க முக்கிய முடிவுகளை மேற்கொள்ளவிருக்கிறது.

முதற்கட்டமாக, செயற்குழுவுக்குத் தரப்பட்டுள்ள சிக்கலும், பணிக்குரிய இலக்கும் வரையறை செய்யப்பட்டுள்ளன. இவற்றைப் போலவே, பூரணப்படுத்தப்பட்டுள்ள பொதுத்தொடர்புக் குழுச் சட்டத்தரணிகள், முன்னெடுப்புக்குரிய ஆய்வெல்லைகளை எதிர்வரும் நாட்களில் வகுக்கவுள்ளனர்.

இந்த அறிக்கை வெளியாகும் பொழுதில், செயற்குழுவின் இணையத்தளமான www.tamildemocracy.org இல், தரப்பட்டுள்ள சிக்கலும், பணியின் இலக்கும், ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியாகியிருக்கும். இவற்றை மேலும் மெருகூட்ட விரும்புவோர், தமது வரைபுகளை, மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கலாம். முறையாக வடிவமைக்கப்படாத ஆரம்ப நிலையிலேயே இணையத்தளம் தோற்றமளித்தாலும், உள்ளடக்கத்தின் தேவை கருதி, வகுக்கப்படும் ஆய்வெல்லைகளும் அடுத்த கட்ட நடவடிக்கைகளும் அங்கு தொடர்ச்சியாக அறியத்தரப்படும்.

ஆய்வெல்லைகளை முழுமையாக வகுத்தவுடன், வரையறை சார்ந்த பொருள் கோடல்களுக்கான கேள்விக்கொத்தொன்றை, பொதுத் தொடர்புக்குழு தயாரிக்கும். அந்தக் கேள்விக்கொத்தை, மீள்வடிவமைக்கப்படும் இணையத்தளத்தில் வெளியிட்டு, அதன் மூலம், மக்கள் தளத்திலிருந்தான பதில்களையும் ஆலோசனைகளையும் பரவலாகப் பெற்றுக் கொள்ள செயற்குழு திட்டமிட்டிருக்கிறது.

அத்தோடு, செயற்குழுவின் திட்டமிடல் குறித்த விளக்கக் காட்சி ஒன்றும் எதிர்வரும் நாட்களில் சமூக வலைத்தளங்களில் பரிமாறக்கூடிய வகையில் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

இம் முயற்சி தொடர்பான பரீட்சார்த்த வழிவரைபடமும் தற்போது வகுக்கப்பட்டுள்ளது. குழுக்கூட்டங்களின் மூலம் அடையப்படும் முடிவுகளின் அடிப்படையிலும், பின்னூட்டங்களின் மூலம் கிடைக்கும் ஆலோசனைகளின் மூலமும், இந்த வழிவரைபடம் மீள்வாசிப்புக்குட்படுத்தப்படும். வழிவரைபடத்தின் முக்கிய மைற்கற்கள் எட்டப்படுகின்றபோது, தேவைக்கேற்ப இணையவழிப் பொதுக் கூட்டங்களும் பொதுத் தொடர்புக் குழுவால் நடாத்தப்படும்.

இயன்றவரை, கேள்விகளையும் கருத்துக்களையும் மின்னஞ்சல் மூலம் தெரிவிப்பது, அவற்றைத் தவறவிடாது கையாள்வதற்கு உதவியாக இருக்கும். எனினும், பொதுத் தொடர்புக்குழுவோடு தொலைபேசியில் தொடர்புகொள்ள வேண்டிய அவசிய தேவை ஏதும் இருப்பின், மாலை ஏழு மணிக்கும் இரவு ஒன்பது மணிக்கும் இடையில் (0)77 852 4349 எனும் அலைபேசி இலக்கத்துடன் மட்டும் தொலைபேசித் தொடர்புகளை மட்டுப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

சட்டத்துறையில் 14 வருட அனுபவம் கொண்ட சட்டத்தரணி எவ்.எக்ஸ்.எஸ் விஜயகுமார் (மட்டக்களப்பு) இக்குழுவின் இணைப்பாளராகப் பணியாற்றுவார். வெளிப்படைத் தன்மை கருதி, பொதுத்தொடர்புக்குழுவில் இணைந்துள்ள இதர சட்டத்தரணிகளின் பெயர் விபரங்களையும் அறியத்தருகிறோம்: யாழினி கௌதமன் (வவுனியா, 11 வருட நீதிமன்ற அனுபவம்) அவர்களுடன் இளம் சட்டத்தரணிகள் சிவகுமார் ஐஸ்வர்யா (திருகோணமலை), வீ. எஸ். எஸ். தனஞ்சயன் (முல்லைத்தீவு) மற்றும் இந்த அறிவித்தலை மேற்கொள்ளும் அ. அன்ரனி றொமோள்சன் (மன்னார்) பங்காற்றுவர். ஏனைய மாவட்டங்களில் இருந்தும் பங்கேற்க முன்வருவோரை பால்நிலைச் சமத்துவத்துடன் இணைத்துக்கொள்ள விரும்புகிறோம்."

## போராட்டங்களை...

யான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர எச்சரித்துள்ளார்.

தொற்றுநோயால் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, நாடு மீண்டும் திறக்கப்பட்டுள்ள நிலையில் தொழிற் சங்கங்கள் அல்லது ஏதேனும் குழுக்கள் வேலைநிறுத்தங்கள் மற்றும் போராட்டங்களை நடத்தினால் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பொறுப்பான அமைச்சராக நான் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும் எனவும் அவர் எச்சரித்தார்.

அதிக கூட்டங்கள் காரணமாக மற்றொரு கோவிட் -19 அலை ஏற்பட்டால் நாடு கடுமையான சிக்கலை எதிர்கொள்ளும் என்றும் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## யாழ்.பல்கலைக்...

அழைத்து வகுப்பு நடத்திய யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர்கள் ஐந்து பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக அனுப்பி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த விரிவுரையாளர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.அவர்களுடன் மாணவர் ஒருவரும் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த அனைத்து வருடத்திலும் இசைக் கருவியைப் பிரதான பாடமாகப் பயிலும் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் நேரடியாக பங்கேற்கவேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தால் வலியுறுத்தித் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து மலையகம் உட்பட நாட்டின் வெவ்வேறு பகுதிகளையும் சேர்ந்த மாணவர்கள் யாழ்ப்பாணம் வந்து வகுப்புக்களில் பங்குகொண்டிருந்தனர்.

அவர்களில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் தொற்று அறிகுறிகள் காணப்பட்ட நிலையில் துணைவேந்தர் ஊடாக சுகாரத் தரப்பினருக்கு தகவல் வழங்கப்பட்டது.

குறித்த மாணவர்கள் இருவரையும் பொறுப்பேற்பதற்காக சுகாதாரத் தரப்பினர் அவர்கள் இருந்ததாக தெரிவிக்கப்பட்ட இணுவில் பகுதிக்குச் சென்றனர்.

இருந்தபோதிலும் மாணவர்கள் இருவரும் சுகாதாரத் தரப்பினருடன் நோயாளர் காவு வண்டியில் செல்வதற்கு மறுப்புத் தெரிவித்ததாகவும், தம்மை யார் அழைத்தாலும் செல்லவேண்டாம் என்று தமது துறைத் தலைவர் தமக்கு அறிவுறுத்தியுள்ளார் என்றும் சுகாதாரத் தரப்பினருக்கு தெரிவித்தனர்.

அதன் பின்னர் மாணவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் இருவருக்கும் கொரோனார் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இசைத்துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்களின் பி.சி.ஆர் முடிவுகள் நேற்று வெளியாகின.

அவற்றின் அடிப்படையில்,

விரிவுரையாளர்கள் ஐவர், மற்றும் ஏற்கனவே தொற்றுக்குள்ளான மாணவர்களுடன் நெருங்கிப் பழகிய நிலையில் தனிமைப்படுத்தலில் உள்ள மாணவர் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

மற்றுமொரு மாணவன் மீள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடமைக்கு...

இடம்பெற்றது. இதனால், அப்பகுதி நேற்றிரவு பதற்றமாகக்காணப்பட்டது.

ஊரெழு பகுதியில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர். மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருவர் தலைக்கவசமின்றி ஆபத்தான முறையில் பயணித்தனர். அவர்களை வழிமறித்து சாரதி அனுமதிப்பத்திரத்தை வாங்கி தண்டனைப் பத்திரம் எழுத முற்பட்ட போது அங்கு வந்த குறிப்பிட்ட பிரதேச சபை உறுப்பினர் பொலிஸாருடன் முரண்பட்டார். அவரது நடவடிக்கை எல்லை மீறிச் சென்றதனால் பொலிஸ் உத்தியோகத்தர் வானத்தை நோக்கி இரண்டு தடவை சூடு நடத்தி எச்சரித்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட பிரதேச சபை உறுப்பினர் தன்னை ஈ.பி.டி.பி. கட்சி என அறிமுகப்படுத்தி பல தடவைகள் பொலிஸாருடன் முரண்பட்டு கடமைக்கு இடையூறு விளைவிப்பவர் என்றும் பொலிஸார் கூறினர். (3)

## சடுதியாக...

களும் அடங்குகின்றனர்.

அதற்கமைய 30 வயதுக்குட்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 8 ஆண்களும், 3 பெண்களும் அடங்கலாக 11 பேர் மரணித்துள்ளனர்.

60 வயதுக்கு மேற்பட்ட 28 பேரின் மரணங்கள் பதிவாகியுள்ளன. அவர்களில் 14 ஆண்களும், 14 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## யாழ். கலாசார...

யாழ்ப்பாணத்துக்கு நேற்று மாலை வருகை தந்த அவர், மத்திய கலாசார மண்டபத்தை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களிடம் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் கலாசார பண்பாடுகளுக்காக இந்திய அரசின் 11 மில்லியன் அமெரிக்க டொலர் நிதிப் பங்களிப்போடு அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம் இலங்கை அரசின் பங்களிப்புடன் விரைவில் திறக்கப்படும்.

திறந்து வைக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு கட்டடத்தின் பராமரிப்பு செலவையும் இந்தியாவே பொறுப்பேற்க உள்ளது.

இலங்கைக்கு இந்தியா பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றது" என்றும் இந்திய வெளியுறவுச் செயலாளர் வெளியுறவுத் துறை செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை இந்திய வெளியுறவுச் செயலர் சுற்றி பார்வையிட்டார். அவருடன் இந்திய தூதுவர் கோபால் பாக்லேயும் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனும் வருகை தந்தனர்.

அவரது வருகையை முன்னிட்டு யாழ்ப்பாண கலாசார மத்திய நிலைய வளாகத்தில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. (அ-03)

## நேற்று 800...

சத்து 20 ஆயிரத்து 430 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 652 நேற்று குண மடைந்துள்ளனர். (இ)

## வடக்கில் 33...

தது. அதன் அடிப்படையில்,

யாழ்.மாவட்டத்தில் 13 பேர்

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 08 பேர், (யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர்கள் ஐவர், மாணவர் ஒருவர்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் 05 பேர்,

வவுனியா மாவட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேர்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 08 பேர்

மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 07 பேர்,

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## எந்தவொரு...

நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கெரவலப்பிட்டிய யுகதனவி மின்உற்பத்தி நிலையத்தின் பங்குகள் அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்படுவதற்கு "மொட்டு" கூட்டணி அரசிலுள்ள பங்காளிக் கட்சியினர் போர்க்கொடி தூக்கியுள்ளனர். அரசுக்கு எதிராகப் பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையிலேயே அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஊடகங்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

எமது அரசில் கருத்துச் சுதந்திரத்துக்கு இடமிருக்கின்றது. எவரும் அரசை வாழ்த்தலாம் விமர்சிக்கலாம்.

ஆனால், அரசை வீழ்த்தலாம் என்று உள்ளேயும் வெளியேயும் யாரும் சூழ்ச்சி வகுத்தால் அது ஒருபோதும் வெற்றியளிக்காது. அரசுக்குள் எவரும் இருக்கலாம் எவ ரும் வெளியேறலாம். எவரும் புதிதாக இணையலாம். எமது கதவு எப்போதும் திறந்திருக்கும்.

ஆனால், அரசுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுவோருக்கு உரிய நேரத்தில் தக்க பதிலடி கொடுப்போம்-என்றார்.

ஈழநாடு
Eelanadu

# தொற்றுக்குள்ளானோருக்கு ஏற்படும் 9 விதமான நோய்கள்

## பட்டியலிட்டார் சந்திம ஜீவந்தர

கொழும்பு, ஒக். 04

**கொரோனாத் தொற்றுக்குள்ளாகும் நபர்களுக்கு 3 மாதங்கள் முதல் 6 மாதங்கள் வரையான காலப் பகுதிக்குள் ஏற்படும் 9 விதமான நீண்ட கால நோய் அறிகுறிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக நோய் எதிர்ப்பு, ஒவ்வாமை பிரிவின் பிரதானி விசேட வைத்திய நிபுணர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.**

சிரமமாக மூச்சு எடுத்தல், வயிற்று நோய் அறிகுறிகள், மன அழுத்தம், நெஞ்சு மற்றும் தொண்டை வலி, அறிவாற்றல் பிரச்னைகள், சோர்வு, தலைவலி, தசை வலி மற்றும் ஏனைய வலிகள் என 9 விதமான நோய் அறிகுறிகளை அவர் பட்டியலிட்டுள்ளார்.

இந்த நோய் அறிகுறிகளில் மன அழுத்தமானது 15 வீதத்தால் அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிரமமாக மூச்சு எடுத்தல் - 8%, வயிற்று நோய் அறிகுறிகள் - 8%, மன அழுத்தம் - 15%, நெஞ்சு மற்றும் தொண்டை வலி - 6%, அறிவாற்றல் பிரச்சினைகள் - 4%, சோர்வு - 6%, தலைவலி - 5%, தசை வலி - 1.5 %, ஏனைய வலிகள் - 7%

இந்த நோய் அறிகுறிகளுக்கு



உள்ளாவோரில் பெண்களே அதிகம் என்றும் விசேட வைத்திய நிபுணர் சந்திம ஜீவந்தர மேலும் கூறியுள்ளார். (இ)



# எழுதுமட்டுவாள் பகுதியில் 820 லீற்றர் கோடா சிக்கியது

யாழ்., தென்மராட்சி, எழுதுமட்டுவாள் பகுதியில் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது 820 லீற்றர் கோடாவும், உற்பத்தி உபகரணங்களும் கைப்பற்றப் பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம் பெறுகின்றது எனச் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து உதவி மதுவரி ஆணையாளர் தர்மசீலன், மதுவரி அத்தியட்சகர் தங்கராசா ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய நிலையப் பொறுப்பதிகாரி ராஜ்மோகன் தலைமையிலான மதுவரி நிலையத்தினர் நேற்று மாலை திடீர் சுற்றி வளைப்பு மேற்கொண்டனர். இதன்போதே கோடாவும், உற்பத்தி உபகரணங் களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ - 02)

# பயணக்கட்டுப்பாடுகளை தளர்த்துகின்றது கட்டார்!

கொழும்பு, ஒக். 04

முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்ட இலங்கைப் பயணிகளுக்கான கட்டுப்பாடுகளை எதிர்வரும் 6ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கட்டார் தளர்த்தவுள்ளது.

இந்தியா மற்றும் பல நாடுகளுடன் இலங்கையும் கட்டார் அதிகாரிகளால் விதிவிலக்கான சிவப்பு நாடுகளாக பட்டியலிடப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசி மூலம் முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்ட 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட விதிவிலக்கான சிவப்பு நாடுகளைச் சேர்ந்த பயணிகள் ஒக்டோபர் 6ஆம் திகதி முதல் இரண்டு நாட்களுக்கு ஹோட்டல் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

11 வயதுக்குட்பட்ட குழந்தைகளும் (தடுப்பூசி போடாதவர்கள்) அவர்களுடைய பெற்றோர் அல்லது குடும்ப உறுப்பினர்களில் ஒருவரும் அல்லது முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டவர்களும் இரண்டு நாட்களுக்கு ஹோட்டல் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் படுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தகைய பயணிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் என்றும், கட்டாருக்கு வருவதற்கு 72 மணி நேரத்துக்கு முன்னர் பரிசோதனை முடிவு எதிர்மறையாக இருக்க வேண்டும் என்றும், தனிமைப்படுத்தப்பட்ட ஹோட்டலில் கட்டார் வந்த 36 மணி நேரத்துக்குள் பயணிகள் பி.சி.ஆர். பரிசோதனையும் நடத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மட்டக்களப்பில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

மட்டக்களப்பு, ஒக். 04

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறக்கொட்டாஞ்சேனை பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த பாரியளவிலான கசிப்பு உற்பத்தி நிலையம், மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் நேற்று அதிகாலை முற்றுகையிடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத்மாசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக, மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான குழுவினர் இந்த முற்றுகையை முன்னெடுத்தனர்.

முறக்கொட்டாஞ்சேனை ஆற்றுப் பகுதியில் முன்னெடுக் கப் பட்டுவந்த இந்தப் பாரியளவில் கசிப்பு உற்பத்தி நிலையத்தை, இயந்திரப் படகு மூலம் சென்று முற்றுகையிட்டனர்.

இதன்போது 4 பரல்களில் கசிப்பு காய்ச்சுவதற்காக வைக் கப்பட்டிருந்த 08 இலட்சத்து 40 மில்லி லீற்றர் கோடா மீட்கப் பட்டு அழிக்கப்பட்டதுடன், 01 இலட்சத்து 65 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பும்



மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்திவந்த 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திய தோணியும் மீட் கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்களும் கைப்பற்றப்பட்ட பொருள்களும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஐ.பி.பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார். (இ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்- சிவஸ்ரீ.கு.வை.க வைத்தீஸ்வர குருக்கள் தலைவர் இந்து குருமார் அமைப்பு



7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் (மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-எதிர் நீச்சல்,நையாண்டி திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்-நடிகர் தீபக்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் றிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம் (திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை) மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு